Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 தை 16 செவ்வாய்க்கிழமை (29.01.2013) பக்கங்கள் 20 ஓசை – 121














# அவதூறு செய்திகளை நியாயப்படுத்த முடியுமா? யாழ். நீதிமன்றில் அமைச்சர் டக்ளஸ் கேள்வி

## 'உதயன்' மீதான வழக்கு சூடுபிடிக்கிறது

(யாழ்ப்பாணம்)

ஆதாரமற்ற அவதூறு பரப்பும் செய்திகளை 'உதயன்' பத்திரிகை தொடர்ச்சியாக வெளியிட்டுள்ளது. எனக்கும் எனது கட்சிக்கும் களங்கம் ஏற்படுத்தும் நோக்குடன் விஷமத்தனமான முறையில் பிரசுரிக்கப்பட்ட செய்திகளை அப்பத்திரிகையின் ஆசிரியர் இந்த நீதிமன்றின் முன்னால் நியாயப்படுத்துவாரா? என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். நீதிமன்றில் கேள்வியெழுப்பினார்.

தனதும் தனது கட்சி மீதும் களங்கம் ஏற்படுத்தும் முகமாக உதயன் பத்திரிகையினால் பிரசுரிக்கப்பட்ட அவதூறுச்செய்திக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடுத்த ஆயிரம் (1,000) கோடி ரூபா மானநஷ்டம் கோரும் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



நேற்றுக் காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்பாக தனது சிரேஷ்ட வழக்கறிஞர் அப்துல் நஜீம், சட்டத்தரணி டி.ரெங்கன் ஆகியோரின் அனுசரணையுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

# அமைச்சரவையில் அதிரடி மாற்றம்



(கொழும்பு)

அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கு அமைவாக புதிதாக 10 அமைச்சர்களும் 6 பிரதி அமைச்சர்களும், 2 திட்ட அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

சம்பிக்க ரணவக்கவிடம் இருந்து மின்சக்தி அமைச்சு மீளப் பெறப்பட்டு அது பவித்திரா வன்னியாராச்சிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

சுசில் பிரேமஜயந்தவிடமிருந்து பெற்றோலியத்துறை மீளப் பெறப்பட்டு அனுர பிரியதர்சன யாப்பாவிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 3 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முழுமையான விபரம் வருமாறு,

பெற்றோலிய வளத்துறை - அனுர பிரியதர்ஷன யாப்பா, சுற்றாடல் துறை - சுசில் பிரேமஜயந்த, மின் சக்தி - பவித்ரா வன்னியாராச்சி, தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி - சம்பிக்க ரணவக்க, முதலீட்டு ஊக்குவிப்பு - லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, வன விலங்கு சேவைகள் - விஜித் விஜித முனி சொய்சா, உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் - பசீர் சேகுதாவூத், கல்விச் சேவைகள் - துமிந்த திசாநாயக்க, தாவரவியல் மற்றும் பொது விநோதம் - ஜயரத்ன

19 ஆம் பக்கம் பார்க்க

# கிணற்றிலிருந்து சடலம் வல்லைவெளியில் மீட்பு

தொண்டைமானாறு வல்லை வீதியோரமாகவுள்ள ஒற்றைப் பனையடி வயல் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் 1.00 மணியளவில் இச்சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் இதில் கொத்தியகாடு கெருடாவில் தெற்கு தொண்டைமானாற்றைச் சேர்ந்த கிட்டினன் தவராசா (வயது - 50) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் கடந்த சனிக்கிழமை பி.ப. 6 மணியிலிருந்து காணாமல் போனதையடுத்து அவரது மனைவி மற்றும் உறவினர்கள் அவரைத் தேடிய நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

அதன் பின்னரும் தொடர்ந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# பெண்ணின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகர் மேற்கில் நேற்றுப் பிற்பகல் பெண் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியா குருமன்காட்டில் உள்ள தனது கணவனின் வியாபார நிலையத்திற்கு சென்று திரும்பிய இவர் நேற்று பிற்பகல் தனது தையல் நிலையத்தின் பின்பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டதாக அயலவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க

# விழிப்புலன் இழந்த மாணவன் சாதனை படைக்க துடிக்கிறார்

(திருநெல்வேலி)

விழிப்புலன் இழந்த மாணவன் ஒருவர் மரதன் ஓட்டத்தில் பங்கேற்கவுள்ளார். நாளை காலை 6.00 மணியளவில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

சுன்னாகம் வாழ்வகத்தைச் சேர்ந்த விஜயகுமார் விஜயலாதன் என்னும் மாணவனே இவராவார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் இவர் முற்றிலும் கண்பார்வை இழந்தவராவார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலிருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வரைக்கும் இம்மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது. இவருக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்க தூதுக்குழுவுக்கு ஷிராணி விவகாரத்தை போட்டுக் கொடுத்தார் ரணில்

(கொழும்பு)

கொழும்புக்கு வருகை தந்துள்ள அமெரிக்க உயர்மட்டக் குழு நேற்றுப் பிற்பகல் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பு மாநகர முதல்வரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் மனித உரிமை குறித்த நிலைமை தொடர்பில் விரிவாக பேசப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்

19 ஆம் பக்கம் பார்க்க

# மாணவர் விடுதலை விரைவில்

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தற்போது வெலிகந்த தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எஞ்சிய இரண்டு மாணவர்களும் அடுத்த மாதமளவில் விடுதலை செய்யப்படுவர்கள் என இராணுவத்

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய தொடர் ஆரம்பம்....



## பங்கு பிரிப்புக்களும் படுகொலையும் 01

சாத்திரி

# கண்டாவளை முசுறன்பிட்டி மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள முசுறன்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த 61 குடும்பங்களுக்கு நேற்று நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரினால் காணி அனுமதிப் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக சொந்தமான காணியோ நிரந்தர வீடுகளோ இன்றி வாழ்ந்து வந்த இக்கிராம மக்களுக்கு கால் ஏக்கர் அளவு காணியும் இந்திய வீட்டுத்திட்டமும் வழங்கப்பட்டு அந்த காணிக்குரிய காணி அனுமதி பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. காணி ஆவணங்களை வழங்கி வைத்து மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்,

இந்த கிராம மக்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலான மக்களுக்கு காணிக்கான ஆவணங்கள் இல்லாததோடு இன்னும் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நிரந்தர வீடுகள் இன்றி உள்ள நிலையிலும் முசுறன்பிட்டி கிராம மக்களுக்கு நிரந்தர வீடுகளும் காணி ஆவணங்களும் வழங்கப்படுகின்றமை ஒரு வரப்பிரசாதமே எனத் தெரிவித்த அவர் இக்கிராமத்திற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மீள் எழுச்சித்திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி மற்றும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள் என்பவற்றுடன் மிக முக்கிய தேவையான மின்சாரமும் முசுறன்பிட்டி மக்களுக்கு விரைவில் கிடைக்ககூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளது எதிர்வரும் மார்ச் மாதம் புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத் திருவிழாவுக்குமுன் ஆலயத்திற்க்கான மின்சாரம் இக்கிராமத்தின் ஊடாக கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது எனவே அதனடிப்படையில் முசுறன்பிட்டி கிராமத்திற்கான மின்விநியோக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியும்

மேலும் கிளிநொச்சி மாவட்டதைப்பொறுத்தவரை மக்கள் கடின உழைப்பாளிகள் கடந்த கால யுத்தம் அவர்களின் உழைககும் சக்தியை மிகப் பாரியளவில் பாதித்துள்ளது. இருப்பினும் மீண்டும் எம்மக்கள் உழைக்கும் சமூகமாக மாறவேண்டும் அதுவே மக்களின் வாழ்வில் நிரந்தர மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் எப்பொழுதும் நாம் நிவாரணங்களை எதிர்பார்க்கும் சமூகமாக இருக்ககூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கிராம அலுவலர் சாந்தி கிருஸ்ணா, முன்னாள் கிராம அலுவலர் பரமதாஸ், காணி அலுவலர்களான பௌதாரணி, விமலகாந்தன், கயந்தினி, மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.


# வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : சி.சிவானுஜன்

முகவரி : டச்சு வீதி, மூளாய், சுழிபுரம்.

அகவை 1 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





# பத்தாயிரம் அதிஷ்டம்

(திருநெல்வேலி)

இணுவிலைச் சேர்ந்த ஒருவருக்கு அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் பத்தாயிரம் ரூபா பணம் பரிசாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை லொத்தர் சபையினால் அதிஷ்டம் பார்க்கப்பட்ட அபிவிருத்திச் சீட்டிழுப்பில் இவருக்கு இப் பணம் கிடைத்தது.

சுன்னாகம் காங்கேசன் துறை வீதியில் அதிஷ்ட சீட்டுக்கள் விற்பனை செய்யும் வயித்திலிங்கம் நடராசா என்பவரிடம் இந்த அதிஷ்டச் சீட்டினை இவர் வாங்கியிருந்தார். இச்சீட்டு முகவரிடம் அதிஷ்ட சீட்டு வாங்கியவர்களில் இரண்டு சுன்னாகம் வாசிகளுக்கு ஏற்கனவே ஒருவருக்கு ஐம்பத்தேழு இலட்சமும், மற்றொருவருக்குப் பத்து இலட்சம் பணமும் கிடைக்கப் பெற்றிருந்தது. தற்போது மூன்றாமவருக்குப் பத்தாயிரம் ரூபா கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (137)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஒளிவிழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது தென்னிந்திய திருச்சபை சாவகச்சேரி போதகர் வண. செல்வநாயகம் ஒளிவிளக்கேற்றி வைக்கும்போது.

# தென்மராட்சிப் பகுதியில் பனங்கிழங்கு அறுவடை



(சாவகச்சேரி)

பனங்கிழங்கு அறுவடை தற்போது தென்மராட்சிப் பகுதிகளில் ஆரம்பித்துள்ளது. இம்முறை பனங்கிழங்கு உற்பத்தியில் கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு அதிகளவானோர் அக்கறை காட்டியுள்ளனர். தற்போது பனங்கிழங்கு சந்தைக்கு அதிகளவில் கொண்டுவரப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஊர் புறங்களில் சில வியாபாரிகள் நேரடியாகச் சென்று பாத்தியாகக் கொள்வனவு செய்து கிழங்கு பிடுங்கிச் செல்கின்றனர். இன்னும் ஓரிரு மாதங்களுக்குப் பனங்கிழங்கு சீசன் காணப்படும்.

கடந்த மாதத்தில் 5 ரூபா வீதம் ஒரு பனங்கிழங்கு விற்கப்பட்ட போதிலும் தற்போது இதன் விலை வீழ்ச்சியடைந்து 2,3 ரூபாக்களுக்கு விற்கப்படுகின்றது. இனிவரும் காலங்களில் மேலும் வீழ்ச்சி ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தென்பகுதி வியாபாரிகளே அதிக பனங்கிழங்கை கொள்வனவு செய்வதாகவும் இதனால் பனங்கிழங்கு உற்பத்தியாளர்கள் நன்மை அடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# ஒஸ்மானியாக் கல்லூரியில் பொன்விழா ஏற்பாடுகள்

இவ்வருடம் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா ஆண்டாகும். 1963 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி கடந்த இரு தசாப்தங்களாக பாழடைந்து கிடந்தது. கடந்த 2005 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கல்லூரியின் அபிவிருத்தி வேலைகள் இப்பொன்விழா ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற ஹிஜிரி 1434 முஹர்ரம் பரிசளிப்பு மற்றும் ஊடகவியலாளர் கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினாராக யாழ். மாநகர சபை முதல்வர் சார்பில் கலந்து பேசிய பிரதி முதல்வரும், சட்டத்தரணியுமான எம்.எம்.ரமீஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். நிகழ்வை பிளவ்ஸ ஹாஜியார் பௌண்டேஷன் அனுசரணையுடன் வடமாகாண அஹதிய்யா சம்மேளனம் நடத்தியது. கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாறக் தலைமைதாங்கினார். தொடர்ந்து பேசுகையில், எம்.எம். ரமீஸ் தெரிவித்ததாவது,

பொன்விழா ஞாபகார்த்தமாக கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஒதுக்கி வழங்கியுள்ள 12 மில்லியன் ரூபாவில் இருமாடிக் கட்டடம் கட்டப்படவுள்ளது.

அதற்கு மேலும் தேவைப்படும் 4 மில்லியன் ரூபாவையும் அமைச்சர் வழங்குவதாக ஒப்புக கொண்டுள்ளார். அதைத் தவிரவும் கல்லூரி அபிவிருத்தி வேலைகளில் யாழ். முஸ்லிம் வட்டார மக்களும் ஒன்றிணைந்து பல செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர். இவ்விதம் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து பேசுகையில் யாழ். பொலிஸ நிலைய உதவி அத்தியட்சகர் எம்.சி.எம்.எம்.ஜிப்ரி கூறியதாவது,

எனக்கு முன்பாகப் பேசிய இரு இந்துத் தமிழ் சகோதரர்கள் தெரிவித்தது போன்று தொண்ணூறுகளுக்கு முன்பாக யாழில் வாழ்ந்த இந்து, இஸ்லாமிய மக்களிடையே இருந்த அன்னியோன்னியம் பிறரது கண்பட்டதுபோல் இடையில் ஏற்பட்ட கசப்புணர்வு பலரது வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கியது.

அதை நினைக்கையில் ஒவ்வொரு முஸ்லிம் சகோதரர் மனங்களிலும் சொல்லொனா வேதனை ஏற்படுவதைத தடுக்க முடிவதில்லை என்றார். மற்றும் பா.ஸ்வரராசா திரைப்பட இயக்குநர் கே.சவராசா ஆகியோரும் உரையாற்றினர். 512 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர், போபரல் ஏ.பி.பால்லவஸ பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (68)





நேற்று வேலணை பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தில் செயற்குழு தெரிவு செய்யப்பட்டது, இந்நிகழ்வில் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுத் தலைவர் பசுபதி சீவரத்தினம் மற்றும் வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா, மாவட்ட கூட்டுறவு ஆணையாளர், பனைதென்வள கூட்டுறவுப் பரிசோதகர், பனை தென்னைவள வடமாகான சுட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொன்டனர்.

# மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்கள் வேண்டும்

## - முன்னாள் அதிபர் வேண்டுகோள் -

(அரியாலை)

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்களை மாணவர்களின் நலன் கருதி மீண்டும் ஆரம்பிக்க கல்விச்சமுகமும், தீவக கல்வி வலயமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடசாலையின் முன்னாள் அதிபரும் முன்னாள் கொத்தணி அதிபருமான கை. பேரின்பநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் சு.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

சொந்த இடத்தில் மீண்டும் இப்பாடசாலை இயங்குவதற்கு மண்டைதீவு இராணுவக் கட்டளையதிகாரி 2006 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியிருந்தார்.

இதன்பின்னர் மீளவும் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இருபது வருடங்கள் கடந்த பின்பும், இந்தப் பாடசாலையில் இருந்த உயர்தர கலைப்பிரிவு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள் நீண்ட தூரம் சென்று குடாநாட்டு பாடசாலைகளில் அனுமதி பெற்று கல்வி கற்றுவருகின்றனர்.

எனவே கல்வித் திணைக்கள அதிகாரிகள், கல்விமான்கள், பாடசாலை கல்விச் சமூகம், பாடசாலை பழைய மாணவர்கள் உட்பட மாணவர்களது உயர் கல்வி வாய்ப்பை நிறைவேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அந்த வகுப்பிற்கு போதுமான மாணவர் இருக்கின்றமையே அடிப்படையாகும். எனவே இந்த வகுப்பு ஆரம்பிக்கப்படுவது கட்டாயமானதாகும்.

மேலும் இந்தப்பாடசாலையானது 100 வருடங்களைக் கடந்து இரண்டாவது நூற்றாண்டில் காலடிவைத்துள்ளது. நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டிய தேவை பாடசாலை சமுகத்திற்கும், வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களுக்குமுரியதாகும்.

மண்டைதீவு கிராமத்தின் கிழக்கில் உள்ள கார்த்திகேய வித்தியாலயம் இடப்பெயர்வின் பின் நீண்டகாலமாக மூடிக்கிடக்கிறது.

தீவகத்தின் முதல் பாடசாலையாக திகழ்ந்த இந்தப் பாடசாலை முதன் முதலாக மாணவர்களை சிரேஷ்ட பாடசாலையாக தராதரப்பத்திரப் பரீட்சைக்கு தயார்படுத்தி அனுப்பி முதல் முறையிலேயே பல மாணவர்களைச் சித்தியடையவைத்த பாடசாலையாகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் முதன்நிலை வகித்த பாடசாலை மீண்டும் மாணவர்களது நலன் கருதி திறக்கப்படவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். (23)

# அகற்றப்பட்ட இராமநாதன் சிலையை வேறு இடத்தில் அமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் வளாகத்தினுள் அமைந்திருந்த சேர்.பொன்.இராமநாதன் சிலை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டமை அவரது தியாகத்திற்குச் செய்யும் நன்றிக்கடனாக அமையாது என இந்து பண்பாட்டுக் கழகத் தலைவரும் இந்து மாமன்ற செயலாளருமான வி.செந்தூரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

சிறந்த கல்விமானும், சமயப்பெருவள்ளலுமான சேர்.பொன். இராமநாதன் அவர்களால் மருதனார்மடம் இராமநாதன் பெண்கள் கல்லூரி அமைக்கப்பட்டது. இதன் வளாகத்திற்குள் அமைந்துள்ள அவரது புனித சிலையினை அவ்விடத்தில் இருந்து அகற்றியமை அவரது தியாகத்திற்கு நன்றிக்கடனாக அமையாது.

எனவே அச்சிலையினை உரிய பீடத்தின் மேல் அமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு அமைக்க முடியாதவிடத்து வேறு இடத்தில் உயரமான சீமெந்துப் பீடம்மீது யாவரும் காணும்படியாக அமைக்கவாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்விடயத்தில் கல்லூரிச் சமூகமும், இராமநாதன் அறக்கட்டளை நிர்வாகத்தினரும் உரிய கவனம் செலுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கடந்த வருட இறுதி காலாண்டில் 31967 பேருக்கு சிகிச்சையளிப்பு

## - மல்லாவி வைத்தியசாலை தகவல் தெரிவிப்பு

(மல்லாவி)

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் கடந்த வருட இறுதி காலாண்டு காலப்பகுதியில் 31 ஆயிரத்து 967 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடத்தின் ஜுலை முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் மேற்படி எண்ணிக்கையில் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், இதில் வெளிநோயாளர் பிரிவில் 28 ஆயிரத்து 760 நோயாளர்களும், நோயாளர் விடுதியில் தங்கியிருந்து 2 ஆயிரத்து 243 நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட பற்சிகிச்சைப் பிரிவில் 964 பேருமாக மொத்தம் 31 ஆயிரத்து 967 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் மக்கள் யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து மீள்குடியேறி வாழ்ந்து வரும் இந்நிலையில், அத்தியாவசிய தேவையாக இருக்கும் வைத்திய தேவையை மக்கள் இவ்வைத்தியசாலையூடாக சிரமமின்றிப் பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மல்லாவி ஆதார வைத்தியசாலையின் வைத்தியரும், தாதிமாரும் மக்களுக்கு இந்த முறையில் சிகிச்சையை வழங்குவதாகவும், இதனால் தாம் உடனுக்குடன் சிகிச்சை பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (140)

# கட்டாக்காலி மாடுகள்; அறுவடை பாதிப்பு

(சாவகச்சேரி)

சரசாலை, மட்டுவில் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

தற்போது அறுவடைகள் தொடங்கியுள்ள நிலையில் அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் தமது மாடுகளை மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடுவதால், அறுவடை செய்யப்படாத நெற்பயிர்கள் நாசமாவதாக பல விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் அம்பலந்துறை, சரசாலை, இலந்தைத்திடல் வயல்வெளிகளில் இவ்வாறாக கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளினால் குடும்பத் தகராறுகள் ஏற்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இது குறித்து அப்பகுதி கிராம சேவர்களுக்கு முறையிடப்பட்டுள்ளபோதிலும், கட்டாக்காலி மாடுகளின் தொல்லை இரவு வேளைகளில் தொடர்வதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (இ)

# மயான அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(நயினாதீவு)

வேலணைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அம்பிகைநகர், துறையூர், சாட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள பொது மயானங்களின் அபிவிருத்திக்கு வடமாகாண சபையினால் வேலணைப்பிரதேச சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் உள்ள பொது மயானங்களின் எரியூட்டல் பகுதி, மண்டபம் என்பன அமைப்பதற்காகவே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பொது மயானத்திற்கான அபிவிருத்திப்பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக வேலணை பிரதேச சபை உறுப்பினர் சி.ந.கருணாகரகுருமூர்த்தி அறிவித்துள்ளார். (175)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த மக்களுடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வேள்ட்விசன் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மறவன்புலோ கிராமத்தில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்றினை அண்மையில் மறவன்புலோ மத்தியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடத்தியது.

கிராம சேவையாளர் தி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், மறவன்புலோ கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, மாதர்சங்கம் உள்ளிட்ட மறவன்புலோ கிராமத்தின் சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மறவன்புலோ மக்களின் தேவைகளை இனங்கண்டு செயற்படக்கூடிய வகையில் வேள்ட்விசன் நிறுவனத்திற்கு உறுதுணையாக செயற்படுவதற்காக 11 பேர் அடங்கிய குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

அமைப்புக்களின் நிர்வாக உறுப்பினர்களை உள்ளடக்கி தெரிவாகியுள்ள இவர்கள். மறவன்புலோவில் வேள்ட்விசன் நிறுவனம் மேற்கொள்ளும் அபிவிருத்திகளை முன்னுரிமைப் படுத்துவதில் தமது பங்களிப்பினை வழங்குவர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.



சாவகச்சேரி - கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் இவ்வாண்டில் தரம் 1 இல் இணைந்து கொண்ட மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றபோது பாடசாலை அதிபர் இ.இரவீந்திரன், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.கிருஸ்ணகுமார் மற்றும் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினர் தரம் 1 இல் இணைந்த மாணவி ஒருவருக்கு பரிசு வழங்கிக் கௌரவிப்பதையும் காணலாம். (படங்கள்: ராஜ்குமார்)

பயத்தை உன்னிடமே வைத்துக்கொள், உன் துணிவை மட்டும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தாகம், நீரை கற்றுத்தருகிறது!

புகைப்பிடித்தல் உடலுக்குத் தீங்கானது என்றும் குடி குடியைக் கெடுக்கும் என்றும் அவற்றைப் பாவிப்பவர்களுக்கு எச்சரிக்கையாக எழுதிவைக்கிறார்கள். ஆனால் எந்த எச்சரிக்கைகளும் செய்யப்படாமல் நாமெல்லோரும் மிகப் பெருமளவில் அருந்தி வரும் ஒன்று நம் உடலுக்கு ஏற்படுத்தும் தீங்கு குறித்து கவனப்படுத்துகிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

தாகம் எடுத்தாலோ, விருந்தினர்களை உபசரிக்கவோ, நண்பர்களின் சந்திப்பிலோ இன்று நமக்குக் குளிர்பானங்களே தேவைப்படுகின்றன. உணவகங்களில் சாப்பிடும்போது, தண்ணீருக்குப் பதிலாக குளிர் பானங்களையே எல்லோரும் அருந்துகிறார்கள். நகரப்பகுதிகளில் அது ஒரு புதிய நாகரிகமாகவே மாறியிருக்கிறது.

முப்பது வருடங்களுக்கு முன்பு இப்போது உள்ளதைப் போல அதிகமான குளிர்பானங்கள் இல்லை. இப்போது விதவிதமான பெயர்களில், விதவிதமான சுவைகளில், வெவ்வேறு வடிவப் போத்தல்களில் பல வெளிநாட்டு குளிர்பானங்கள் வந்துவிட்டன. அதற்காக எக்கச்சக்க செலவு செய்து விளம்பரங்களும் செய்கிறார்கள். அதனால் மாணவர்கள், இளைஞர்கள், வேலைக்குப் போகிறவர்கள் எல்லோரும் தண்ணீருக்குப் பதிலாக குளிர்பானங்களையே அருந்துகிறார்கள்.

இது மிகவும் தீங்கானது, தாகம் எடுக்கும்போது தண்ணீர் அருந்துவதுதான் சரியானது, உடல் நலனுக்கு உகந்தது என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். குளிர்பானங்களை உணவுடன் சேர்த்து அருந்துவதால், நம் உடலில் சேரும் கலோரியின் அளவு அதிகமாகும். மேலதிகக் கொழுப்பு உடலில் தங்கும். சுறுசுறுப்பு குறையும் என்கிறார்கள்.

குளிர்பானங்களில் சேர்க்கப்படும் இரசாயனப் பொருட்கள் உடலுக்குத் தீங்கை ஏற்படுத்தும். குளிர்பானங்களில் நிறத்துக்காக தார்ப்பொருள்களைச் சேர்க்கிறார்கள். குளிர்பானங்கள் கெட்டுப் போகாமல் பாதுகாக்க வினிகர் போன்ற பொருட்களையும், அமிலங்களையும் சேர்க்கிறார்கள். இனிப்புக்காக சக்கரினைக் கலக்கிறார்கள்.

இவை குறைந்த அளவு உடலில் சேர்ந்தால் கூட, பல உடல் நலக் குறைபாடுகள் ஏற்படுமாம். நாள்தோறும் குளிர்பானங்களை அருந்தினால், சிறிது சிறிதாக உடலுக்குள் சென்று, மொத்தமாகச் சேர்ந்து பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

இதனால் சிறுநீரகங்கள், கல்லீரல் பாதிக்கப்படும். ஒவ்வாமை வரலாம். தலைவலி வரலாம். தும்மல் வரும். உடல் பருமனாகும். ஊட்டச் சத்துப் பற்றாக்குறை, உயிர்ச்சத்து பற்றாக்குறை போன்றவை ஏற்படும். புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்புண்டு என்று ஆபத்துக்களை அடுக்குகிறார்கள்.

இவ்வளவு கேடு செய்யும் செயற்கையான குளிர்பானங்களை எதற்காக அருந்த வேண்டும்? நாம் நிறையத் தண்ணீர் குடித்தால் நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் இளக வழி ஏற்படும். மலச் சிக்கல் வராது. உடலில் நீர் வற்றிய நிலை ஏற்படாது. தண்ணீர் குடிப்பதால் எந்தத் தீங்கும், பக்கவிளைவுகளும் இல்லை.

குளிர்பானங்களுக்குப் பதிலாக, வர்த்தகைப்பழம், தோடம் பழம், திராட்சை, மாம்பழம், பப்பாளி, வெள்ளரி போன்றவற்றைச் சாப்பிட்டுத் தாகத்தையும் தீர்த்துக்கொள்வதே உடலுக்கு நல்லது. பழங்களைச் சாறு பிழிந்து ஜூஸாகவோ, இளநீரோ குடிக்கலாம்; குளிர்பானம் வேண்டாம் என்கிறார்கள்.

தற்போதைய ஒரு ஆராய்ச்சியில், கொய்யாப் பழத்தை தினமும் 50 கிராம் சாப்பிட்டால், நீரிழிவு வியாதியைக் கட்டுப்படுத்த முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். கொய்யாவைச் சாப்பிட்டால், உணவில் இருந்து இரும்புச் சத்து அதிகமாக உடலுக்குள் ஈர்க்கப்படுகிறது. இதனால் இரத்த சோகை ஏற்படாது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இயற்கையான இவ்வளவு நல்ல பொருட்கள் இருக்க, எதற்குச் செயற்கையான குளிர்பானங்கள்? குளிர்பானங்களை அருந்துவது ஒரு நாகரிகமாகக் கருதப்படலாம். அந்த நாகரிகத்துக்கு நாம் கொடுக்கும் விலை, மோசமான பல உடல் நலக் குறைபாடுகள்தாம்.

- ஆசிரியர்

# இந்திய வீடுத்திட்ட நிர்மாணம் விரைவுபடுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

யுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக இந்திய அரசின் நிதி உதவியில் வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் வீட்டுத் திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மக்களிற்காக இந்திய அரசின் 1400 கோடி ரூபா செலவில் மிகப் பெரிய செயற்றிட்டமாக இது அமையப் பெறவுள்ளது.

2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமளவில் இத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.

இவ் வீட்டுத் திட்டமானது பல கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி நான்கு கட்டங்களாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை முகாம்களில் உள்ள தமிழர்களுக்காக 6000 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

# 13ஆவது திருத்தம் தொடர்பாக கேள்வி எழுப்பவில்லை இந்தியா

## — கூறுகிறார் வெளிவிவகாரச் செயலர் —

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்திய அரச அதிகாரிகள் எவருமே கேள்வி எழுப்பவில்லை என்று வெளிவிவகார செயலர் கருணாரட்ண அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை கூட்டுக் குழுக் கூட்டத்துக்காக, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் கடந்தவாரம் புதுடில்லி சென்றிருந்தார் வெளிவிவகார செயலர் கருணாரட்ண அமுனுகம.

புதுடில்லியில் இருந்து கொழும்பு திரும்பிய அவரிடம், 13ஆவது திருத்தம் குறித்து இந்தியா கரிசனை செலுத்தியதா என்று கேள்வி எழுப்பியதற்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தம் தொடர்பாக இந்திய அதிகாரிகள் எவரும் கேள்வி எழுப்பவில்லை. ஆனால் இந்திய ஊடகங்கள் அதில் அக்கறை செலுத்தின.

கூட்டுக் குழுக் கூட்டத்தை அடுத்து நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில், இது குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விளக்கமளித்திருந்தார்.

13ஆவது திருத்தம் ஏற்கனவே ஒரு சட்டமாக உள்ளது. இலங்கையில் ஆட்சியில் இருப்பது ஒரு கூட்டணி அரசாங்கம்.

இந்தத் திருத்தம் தொடர்பாக வெவ்வேறு அரசியல் கட்சிகளும் அங்கு பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள் என்று அவர் விளக்கமளித்திருந்தார் என்றும் கருணாரத்ன அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

# அனுமதியற்ற விவரணச்சித்திரம் ஒளிப்பதிவாக்கிய 16 பேர்கைது

(கொழும்பு)

உரிய அனுமதி பெற்றுக் கொள்ளாது, விவரணச்சித்திர மொன்றை ஒளிப்பதிவு செய்த 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் அமெரிக்கப் பிரஜை ஒருவரும் அடங்குவார். கற்பிட்டிப் பிரதேசத்தில் வைத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த 11 பெண்கள், தாங்கள் அன்றாட வாழ்க்கையில் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் இந்த விவர ணச் சித்திரத்தில் பதிவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. விவரணச் சித்திரத்தை இயக்கிய கொழும்பைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மாணவி மீது பலாத்காரம்; வைத்திய அதிகாரி கைது

(கொழும்பு)

பாடசாலை மாணவி ஒருவரைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய வைத்திய உயர் அதிகாரி ஒருவர் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் சிலாபம் வைத்தியசாலையில் கடமை புரியும் 51 வயதான உயர் அதிகாரி என பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவி சிகிச்சைகளுக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் சிலாபம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# அரசைப் பலப்படுத்துவதற்கு செய்யப்படவுள்ள மாற்றம்

**சட்டத்தரணி ஸ்ரீநாத்பெரேரா**

(கொழும்பு)

நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றது என ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா தெரிவித்துள்ளார். இந்த அரசாங்கத்திற்கு உண்மையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சில சலுகைகளை வழங்கியே அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொண்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் அரசியல் சாசனத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட உள்ளன என்பது பற்றி தமக்குத் தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், அது அரசாங்கத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கில் செய்யப்படுகின்றது என்பது உறுதி என சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

# போலியான தங்கம் விற்ற எழுவர் வவுனியாவில் கைது

போலி தங்கக் கட்டிகளை விற்பனை செய்த ஏழு பேர் வவுனியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தங்கக் கட்டிகளை கொள்வனவு செய்வதாகத் தெரிவித்துச் சென்ற சந்தேக நபர்களை நேற்றைய தினம் கைது செய்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்கள் வவுனியா - மடுகந்த பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் மற்றும் வவுனியா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# இயந்திரம் மூலம் அறுவடை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் நெல் வயல்களில் மழைநீர் தேங்கி நிற்பதனால் அறுவடை செய்ய இயலாத போதிலும், நெல் அறுவடைசெய்யும் இயந்திரம் மூலம் விவசாயிகள் அறுவடையினை மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் பெய்த மழையினை அடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் குடாநாட்டிலுள்ள பெருமளவான வயல்களில் மழைநீர் தேங்கியுள்ளது. இந்த நிலையில் தென்மராட்சிப் பகுதி வயல்களிலும் நெற்பயிர்கள் விளைந்து அறுவடைக்கு தயாரான போதிலும், தேங்கி நிற்கும மழைநீர் அதற்குத் தடையாக உள்ளது. எனினும் விவசாயிகள் இயந்திரங்களின் உதவியுடன் மட்டுவில் அம்பிலந்துறை, சிலுவில், முசுறி ஆகிய பகுதி வயல் நிலங்களில் அறுவடையை மேற்கொள்கின்றனர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையில் மே மாதம் 2009 ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் புலம் பெயர் நாடுகளில் எஞ்சியிருக்கும் அதன் கட்டமைப்பின் இன்றைய சமகாலப்பார்வை.**


# பங்கு பிரிப்புக்களும் படுகொலையும் 01


**சாத்திரி**

**புலிகள் அமைப்பு முடிவிற்கு வந்துகொண்டிருக்கின்றது என்கிற செய்தி 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் அறிந்து கொண்ட அனைத்துலகத்தை சேர்ந்தவர்கள் இறுதி யுத்தத்திற்கு என சேகரித்த நிதியில் கிடைத்ததை சுருட்டவும் புலிகளின் அசையும் அசையா சொத்துக்களை பங்கு போடும் போட்டியில் பிரிந்து நின்று சண்டை பிடிக்கத் தொடங்கியிருந்தனர்.**

**2012** நவம்பர் 8ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 9.30 ஐ தாண்டிய நேரம் பாரிஸ் 20இல் தமிழர் ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தில் மாவீரர் நாள் பற்றிய ஏற்பாட்டு விவாதங்களை முடித்து விட்டு நான்கு பேர் அலுவலகத்தை விட்டு வெளியே வருகிறார்கள். அந்த நான்கு பேரில் மேக்தாவும் மாஸ்ரரும் வீதியால் நேராக நடந்து செல்ல பரிதியும் பார்த்திபனும் வீதியைக் கடந்து அலுவலகத்திற்கு எதிரேயிருந்த பஸ் நிலையத்திற்கு வந்து பஸ்சிற்காக காத்திருக்கிறார்கள். பஸ் நிலையத்தில் வேறு பல வேற்று நாட்டவரும் பஸ்சிற்காக காத்திருந்த வேளை திடீரென ஒரு வெடிச்சத்தத்தோடு பஸ் நிலையத்தின் பின்புற கண்ணாடி உடைந்து நொருங்குகின்றது. எதற்காக கண்ணாடி உடைந்திருக்கலாமென பரிதி உட்பட அனைவரும் திடுக்கிட்டு பார்த்தபொழுது அடுத்தடுத்த துப்பாக்கிச் சூடுகள் பரிதியின் மார்பிலும் வயிற்றிலும் விழுகின் றது. பார்த்திபன் என்பவர் வீதியை கடந்து ஓடிப்போய் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களிற்கு பின்னால் ஒளிந்து கொள்ள மற்றையவர்கள் பயத்தில் கண்களை பொத்திக்கொள்கிறார்கள். கொலையாளி அருகில் வந்து பரிதி இறந்து விட்டதை உறுதிசெய்து விட்டு தயாராய் ஒருவன் இயக்கிக்கொண்டிருந்த ஸ்கூட்டரில் ஓடிப்போய் ஏற ஸ்கூட்டர் அந்த இடத்தை விட்டு மறைந்து விடுகின்றது. கொலை நடந்த விதத்தை பார்க்கும் போது கொலையாளி உண்மையான குறிபார்த்துச் சுடும் கைதேர்ந்த கொலையாளி இல்லையென்பது மட்டும் தெளிவாகின்றது. கைதேர்ந்த கொலையாளியாக இருந்திருந்தால் ஒரு மீற்றரிற்கும் குறைவான தூரத்தில் இருந்து சுட்ட முதலாவது குண்டு குறி தவறிப் போயிருக்காது. முதலாவது குண்டே பரிதியின் தலையை துளைத்திருக்கும். அல்லது அண்மையில் ஊரில் இருந்து வந்தவராக இருந்திருப்பார். வெளிநாட்டு சூழல் அவரிற்கு பதற்றத்தை கொடுத்திருக்கும். ஆனால் பரிதியோடு கூட இருந்தவர்களின் உதவியோடுதான் தகவல்களை பெற்று கொலைக்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கும் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இது அத்தனையையும் பதற்றத்தோடு கவனித்துக் கொண்டிருந்த ஒருவர் காவல்துறையின் இலக்கத்தை அழுத்துகிறார். சில நிமிடங்களில் அங்கு வந்து சேர்ந்த காவல் துறையினரிற்கு ஹெல்மெட் போட்டபடி முகத்தை துணியால் மூடிய இருவர் சுட்டு விட்டு தப்பிச் சென்றதாக அங்கிருந்தவர்கள் தெரிவிக்க, அதே நேரம் அங்கு வந்து சேர்ந்த தீயணைப்பு படை முதலுதவி பிரிவினர் பரிதியின் உயிர் பிரிந்து விட்டதை உறுதி செய்கிறார்கள். உடனடியாக அங்கிருந்தவர்களின் விபரம் தொலைபேசி இலக்கங்களை பெற்றுக் கொண்ட காவல் துறையினர் அவர்களை அகற்றி விட்டு அந்த இடத்திற்கு யாரும் வராதபடி வீதிகளை மூடிவிடுகிறார்கள். மேலதிக காவல்துறையினர் புலனாய்வுத் துறையினர் தடயவியல் நிபுணர்கள் என அங்கு விரைகின்றார்கள்.

அதற்கிடையில் பரிதியோடு நின்றிருந்த பார்த்திபன் பரிதி கொல்லப்பட்டு விட்டதாக தனது கைத்தொலைபேசி மூலம் செய்தியை மற்றையவர்களிற்கு தெரிவிக்கின்றார். செய்தி பாரிசில் தமிழர்களிடம் வேகமாகப் பரவுகின்றது. மறுபக்கம் காவல்துறையினர் விசாரணையை நடத்திக் கொண்டிருக்கும் போதே கொலை நடந்த ஒரு சில நிமிடங்களிலேயே தாங்களே தமிழ்த் தேசிய ஊடகம் என்று தங்களைத் தாங்களே பிரகடனம் செய்த சில இணையத்தளங்கள் கொலையாளிகளை கண்டுபிடித்து, சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரால் பரிதி படுகொலை என்கிற செய்தியை வெளியிடுகிறார்கள். அதற்கடுத்த நிமிடங்களிலேயே கொலையாளிகளையும் கண்டுபிடித்து, கே.பி. மற்றும் விநாயகம் ஆகியோரின் படங்களைப் போட்டு இவர்கள்தான் கொலையாளிகள் என்றும் செய்திகள் வெளியாகின்றது. இத்தனைக்கும் அப்பொழுதுதான் தடயவியல் பரிசோதனைகள் முடிந்து பரிதியின் உடலை பிரெஞ்ச் காவல்துறையினர் மேலதிக பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.







000 000 000 000

பரிதி,றேகன் என்கிற பெயரில் 84ஆம் ஆண்டு இறுதிகளில் புலிகள் அமைப்பின் அன்றைய பிரதித் தலைவர் மாத்தையாவின் பாதுகாப்பு பிரிவு பொறுப்பாளராக எனக்கு அறிமுகம் ஆகின்றான். பின்னர் 85ஆம் ஆண்டு கிளிநொச்சியில் ஒரு முகாம் பொறுப்பாளராக இருந்தவேளை, கிளிநொச்சி இராணுவ முகாம் பகுதியில் நானும் நின்றிருந்ததால் எங்கள்அறிமுகம் நட்பாகி கடந்த ஆண்டு வரை தொடரவே செய்தது. கடந்த வருடம் வரை தமிழர் வாழும் உலகநாடுகள் அனைத்திலும் புலிகள் அமைப்பின் அனைத்துலக செயலக அமைப்பு ஒரு இடத்தில் நடாத்திவந்த மாவீரர் நாளானது கடந்த வருடம் இரண்டு அமைப்புக்களால் இரண்டு இடங்களில் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போதுதான் நான் பரிதியை சந்தித்து கதைத்திருந்தேன். இரண்டாவது மாவீரர் நாள் ஏற்பாடுகளை செய்திருந்தவர்கள் புலிகளின் தலைமைச் செயலகம் என்று தங்களை பிரகடனப் படுத்தியிருந்தார்கள்.

இந்த தலைமைச் செயலகம் என்பவர்கள் யாரென கொஞ்சம் சுருக்கமாக பார்த்து விடலாம். இறுதி யுத்தத்தின் போது யுத்தப் பிரதேசத்திலிருந்தும் மற்றும் யுத்தப் பிரதேசங்களிற்கு வெளியே அதாவது வடக்கு கிழக்கிற்கு வெளியே நின்றிருந்த இலங்கையிலிருந்து தப்பியோடி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா,தாய்லாந்து ஆகிய நாடுகளிற்கு வந்து சேர்கிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் புலிகளின் புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவர்கள். புலிகளின் முடிவிற்கு பின்னரும் புலிகளின் பெயரில் தொடர்ந்து ராமு சுபன் என்னும் பெயரில் மலேசியாவில் இருந்து வெளியான அறிக்கைகள் இவர்களுடையதுதான். இப்படி வந்து சேர்ந்தவர்கள் தாங்கள் வெளிநாடுகளிற்கு வருவதற்காகவும் மற்றும் முகாம் களில் தங்கியிருக்கும் தங்கள் குடும்பங்களை மீட்கவும் வெளிநாடுகளில் இருந்த அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு பண உதவிகளை கோருகின்றனர்.

ஆனால் புலிகள் அமைப்பு முடிவிற்கு வந்துகொண்டிருக்கின்றது என்கிற செய்தி 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் அறிந்து கொண்ட அனைத்துலகத்தை சேர்ந்தவர்கள் இறுதி யுத்தத்திற்கு என சேகரித்த நிதியில் கிடைத்ததை சுருட்டவும் புலிகளின் அசையும் அசையா சொத்துக்களை பங்கு போடும் போட்டியில் பிரிந்து நின்று சண்டை பிடிக்கத் தொடங்கியிருந்தனர். ஆனால் யாரும் பெரிய வன்முறைகளில் இறங்காமல் புத்திசாலித் தனமாக நடந்து கொண்டார்கள். காரணம் வன்முறைகள் பின்னர் வழக்காகி காவல்துறைக்கு போனால் அவர்கள் நோண்டியெடுத்து உள்ளதையும் பிடுங்கி விடுவார்கள் என்கிற பயம் அவர்களிற்கு. ஏனெனில் புலிகள் இயக்கம் உலகம் முழுவதும் உள்ள வர்த்தக வியாபாரங்களால் மாதம் ஒன்றிற்கு சுமார் 300 மில்லியன் டொலர்களை வருமானமாகப் பெறும் அமைப்பாக இருந்தது. இலங்கையரசே கடன் வாங்கி ஆயுதம் வாங்கி சண்டை பிடித்துக் கொண்டிருந்தபோது, புலிகள் அமைப்பு தங்கள் பணத்திலேயே நவீனரக ஆயுதங்களாக இறக்கி சண்டை பிடித்துக்கொண்டிருந்தார்கள். 2001ம் ஆண்டிற்கு பின்னர் அவர்களால் ஆயுதங்களை வன்னிக்குள் கொண்டு சேர்க்க முடியாமல் போனது வேறு கதை..

அப்படி உலகம் முழுவதும் சொத்து சண்டைகள் நடக்கத் தொடங்கியிருந்தபோது பிரான்சில் பிரிந்து சண்டை பிடித்தவர்களில் முக்கியமாக பரிதி, மேக்தா, சுக்குளா போன்றவர்கள் ஒரு புறமும் ஆதித்தன், சாம்ராஜ் போன்றவர்கள் மறுபுறமுமாக பங்கு பிரிக்கத் தொடங்கியிருந்தார்கள். சாம்ராஜ் என்பவரே புலிகள் அமைப்பின் பணத்தை உண்டியல் முறை மூலம் மற்றைய நாடுகளிற்கு பரிமாற்றம் செய்பவர். இறுதி யுத்தத்திற்கென சேகரித்த பெருமளவு நிதி இவரின் கைகளிலேயேஇருந்தது. பரிதி கொலை செய்யப்பட்ட பின்னர் இவரும் பிரான்ஸ் காவல்துறையால் விசாரிக்கப்பட்டிருந்தார். விசாரணை முடிந்து வெளியில் வந்ததும் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். இவர் தென்னாபிரிக்கா சென்றிருக்கலாம். அதற்கிடையில் பினாமிகளாக தனியார்கள் பெயரில் இருந்த வர்த்தக நிலையங்களின் பினாமிகள் சிலரை மிரட்டியும் பார்த்தார்கள். அவர்களோ பொலிஸுக்குப் போனடித்து விடுவோம் என்றதும் பயத்தில் விட்டு விட்டார்கள். எனது நகரத்திலும் அப்படி புலிகளின் பினாமி உணவகம் ஒன்று ஈழம் றெஸ்ரோரனற் என்கிற பெயரில் ஒருவரால் இயக்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் கடந்த வருடத்திலிருந்து அதன்பெயர் இந்தியன் றெஸ்ரோறன்ராக மாறிவிட்டது.

(தொடரும்)



# பௌத்த தர்மத்திற்கு எதிரான முஸ்லிம்களுக்கு எதிராகவே போர்

## ஜனாதிபதியிடம் பொதுபல சேனா தெரிவிப்பு



இலங்கையிலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் எதிராக நாம் போராடவில்லை. பௌத்த தர்மத்துக்கு எதிராகச் செயற்படும் சில முஸ்லிம் குழுக்களுக்கு எதிராகவே போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் என்று பொதுபல சேனா அமைப்பு, ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளது.

நாட்டில் தற்போது எழுந்துள்ள இனவாதப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுபல சேனா அமைப்பின் அங்கத்தவர்களை அலரி மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில், மேற்படி அமைப்பின் அங்கத்தவர்களான விமலஜோதி தேரர், விதாரன் தெனியே நந்த தேரர், கலகொடஅத்தே ஞானசார தேரர் ஆகி யோருடன் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பசில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது, முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவ்வமைப்பினரிடம் கோரியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த அவர்கள், பௌத்த தர்மத்துக்கு எதிராகச் செயற்படும் சில முஸ்லிம் குழுக்களுக்கு எதிராகவே நாம் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் என்று கூறியுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

# பலாக்காயை உண்டேனும் உயிர்வாழ்வர் மக்கள்

## – என்கிறார் கரு எம்.பி.



இலங்கையில் எந்தவொரு பிரஜையும் பசியால் உயிரிழக்க மாட்டார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பட்டினி ஏற்படும் சூழ்நிலையில் பலாக்காய் மற்றும் ஈரப் பலாக்காயை துவைத்து உண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வாரென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி-அங்குபுர பிரதேச விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்களுக்கு மனிதாபிமானம், கருணை என்பன உள்ளதாகவும் அதுவே மனிதனுக்கான அழகு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதனுக்காக மரியாதை பணத்தைக் கொண்டு வருவதில்லை எனவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

# 80 புலிச் சந்தேக நபர்கள் மகசின் சிறைக்கு மாற்றம்

80 புலிச் சந்தேக நபர்கள் மகசீன் சிறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிச் சந்தேக நபர்களே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் போதியளவு இடவசதி காணப்படாத காரணத்தினால் இவ்வாறு சந்தேக நபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களின் எண்ணிக்கை 106 என சிறைச்சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குடாநாட்டில் இராணுவத்தை குறைப்பதற்கு நடவடிக்கை

## – அமெரிக்க குழுவிற்கு கட்டளைத்தளபதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள இராணுவத்தை மேலும் குறைக்க இராணுவத் தலைமையகத்தின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருகின்ற நிலையில், இன்னமும் 3 சதவீத நிலப்பரப்பு மாத்திரமே கண்ணி வெடி அகற்றுவதற்காக எஞ்சியுள்ளது.

போருக்குப் பின்னர் அரசாங்கத்தினாலும், இராணுவத்தினாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக, குடாநாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்க குழுவினருக்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசிய மற்றும் பசுபிக் விவகார பிரிவுகளுக்கு பொறுப்பான மூன்று பிரதிச் செயலாளர்கள் குழு, நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட நிலையில், யாழ். கட்டளைத் தளபதி மேஜர் மகிந்த ஹத்துருசிங்கவை சந்தித்து கலந்துரையாடியது.

மூவர் அடங்கிய இந்த விசேட பிரதிநிதிகள் குழுவில் அமெரிக்காவின் பிரதி உதவிச் செயலாளர் ஜேம்ஸ் மூர், பாதுகாப்பு பிரதி உதவிச் செயலாளர் விக்ரம் சிங் மற்றும் பிரதி உதவிச் செயலாளர் ஜேன் ஜிம்மர்மன் ஆகியோர் உள்ளிட்ட 10 பேர் அடங்குகின்றனர்.

இதன்போது, யுத்தத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இராணுவம் முன்னெடுத்து வரும் நடவடிக் கைகள் தொடர்பில் யாழ். கட்டளைத் தளபதியினால் அமெரிக்க இராஜாங்க குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இலங்கை இராணுவத்தின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் யாழ். மக்கள் நன்கறிவர்.

மனிதாபிமான உதவிகள், பொதுநல நடவடிக்கைகள், முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் உள்ளிட்ட வடக்கில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத திட்டங்கள் தொடர்பில் இதன் போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது என்று யாழ். படைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த படையினரின் எண்ணிக்கை 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. இங்கு நிலைகொண்டுள்ள இராணுவம் ஒருபோதும் சிவில் நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. தெற்கில் போன்றே வடக்கிலும் அரச கட்டமைப்புக்கான பொறுப்புக்களில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வடக்கில் சில பகுதிகளிலுள்ள காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வாழ்வதால் அக்காணிகளில் இன்னமும் மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. அவ்வாறு வெளிநாடுகளில் வாழ்பவர்கள் நாடு திரும்பும் நோக்கத்தில் இல்லை என்பது தெரியவந்துள்ளது என்றார்.

யாழ். கட்டளைத் தளபதியின் விளக்கத்தைக் கேட்டு முடித்த அமெரிக்க உயர்ஸ்தானிகர் மைக்கேல் ஜே. சிஸன், போருக்கு பிந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை என்று கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 13 ஆவது திருத்தம் இரத்துச் செய்தால் மாகாணசபை உறுப்பினர் பதவி விலகுவர்

## கூறுகிறது ஜாதிக ஹெல உறுமய

13ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தயார் என்றால், கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் பதவி விலகத் தயார் என ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

முன்னுதாரணமாக மாகாண சபைகளில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் மற்றும் அமைச்சுப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சி தயார் என கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டம் இரத்து செய்யப்படுவதனை சில அரசியல்வாதிகள் விரும்பவில்லை.

தங்களது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் உள்ளிட்ட உறவினர்களுக்கு அரசியல் பாடம் படிக்கக் கூடிய பாலர் பள்ளியாக மாகாணசபையை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

எனவே, மாகாணசபை முறைமை ஒழிக்கப்படுவதனை சில அரசியல்வாதிகள் விரும்பவில்லை.

எனினும், 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் இரத்துச் செய்யுமாயின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உறுப்பினர்களை மீளப் பெற்றுக்கொள்ளத் தயார்.

13ஆவது திருத்தச் சட்டம் என்ற பாரிய சதி வலையிலிருந்து தப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.



இந்தியாவின் மனதைக் காயப்படுத்தாது தந்திரமாக இந்த சதியிலிருந்து தப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# பௌத்த சாசன அமைச்சின் பெயரை மாற்றக் கோரிக்கை

பௌத்த சாசன அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் இராஜதுரை கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நாட்டின் ஏனைய அனைத்து மதங்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் பௌத்த சாசன அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். பல்லின மக்கள் வாழ்ந்து வரும் இலங்கையில் ஒரு இன சமூக மதத்தின் பெயரில் மட்டும் அமைச்சு உருவாக்கப்படுவது நியாயமற்றது.

எனவே நாட்டின் சகல மதங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பௌத்த சாசன அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். மத விவகாரங்களுக்கான அமைச்சின் பெயர் பொதுவாக அமைவதனால் அனைத்து மத மக்களுக்கும் சம சந்தர்ப்பங்கள் கிட்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜதுரை சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஓய்வூதியத்தை இழந்தார் ஷிராணி

(கொழும்பு)



முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பணி நீக்கம் செய்யப்பட்ட ஒருவருக்கு ஓய்வூதியம் வழங்க முடியாது என பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் பி.பி.அபயகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடாளுமன்றம் ஒருவரை சேவையிலிருந்து நீக்க தீர்மானிக்கும் விடத்து அவர் ஓய்வூதியம் பெறும் தகைமையை இழக்கிறார் என ஓய்வூதியத் திணைக்களத்தின் பொதுப் பணிப்பாளர் டி. சுவர்ணபால தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியினால் பணி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை முன்னாள் பிரதம நீதியரசர் இழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் டக்ளஸ் தலைமையில் அபிவிருத்தி சிறப்பாக முன்னெடுப்பு

## - வடமாகாண ஆளுநர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடமாகாண ஆளுநர்ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் பகுதிக்கான குடிநீர் விநியோகத்திட்டத்தை நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் மேற்படி நீர்விநியோகத் திட்டத்திற்கான அடிக்கல் ஏற்கனவே நாட்டிவைக்கப்பட்டு கட்டுமானப்பணிகள் நிறைவு பெற்ற நிலையில் நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்கென கையளிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியின் குடிநீர்வசதி மட்டுமல்லாது இளங்கோ சனசமூக நிலைய கட்டுமானப் பணிகளுக்காக நிதியுதவி வழங்க நானும் அமைச்சரும் திட்டமிட்டதன் பிரகாரம் இதற்கென 5 இலட்சம் ரூபாவை வடமாகாண சபையூடாக கையளிக்கவுள்ளேன்.



அத்துடன் இங்கு மேற்கொள்ளப்படவேண்டிய ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளான பாதைப் புனரமைப்பு தொடர்பான திட்டமதிப்பீடு கிடைத்ததும் அதற்குரிய நிதியும் ஒதுக்கீடு செய்து தருவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

குறிப்பாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து இம்மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலுமுள்ள உள்வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வரும் அதே வேளை, குடிநீர் உள்ளிட்ட அபிவிருத்தி தொடர்பிலான செயற்திட்டங்களையும் எதிர்காலங்களில் முன்னெடுக்கவுள்ளோம் எனத்தெரிவித்தார்.

செல்வாபுரம், கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத் தலைவர் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெயகரன், கரவெட்டி பிரதேச செயலர் சிவசிறி, ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச அமைப்பாளர் செந்தில்நாதன். உட்பட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# கவனிப்பாரற்ற நிலையில் பொதுமலசல கூடம்

(மல்லாவி)

மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதியோரமாக மக்களின் பாவனைக்கென உள்ள பொது மலசலகூடம் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட இம்மலசலகூடம், யுத்த அனர்த்தங்களின் பின்னர் இதுவரை எவ்வித புனரமைப்புக்கும் உட்படுத்தப்படாமல் புல், பூண்டுகள் வளர்ந்து பற்றைக் காடாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வாறு புனரமைக்கப்படாமல் இம்மலசலகூடம் உள்ளதால் இவ்வீதியூடாக பயணத்தை மேற்கொள்வோர் மர நிழல்களையும், மறைவிடங்களையும் பயன்படுத்துவதன் நிமித்தம் சுற்றுச்சூழல் சுகாதார மற்றுக் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வீதியூடாக பல மக்கள் தூர இடங்களுக்கும் மற்றும் இதர தேவைகளுக்கும் செல்கின்ற நிலையில், மலசலகூடம் இல்லாமல் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி இம்மலசல கூடத்தை புனரமைக்க உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (140)

## மீளாய்வுக் கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான மீளாய்வுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (116)

# அடிப்படை வசதிகளற்ற குடமியன் இந்து மயானம்

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட குடமியன இந்து மயானமானது சடலங்களை உரிய முறையில் எரிக்கக்கூடிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் உள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மயானத்தை கடந்த நாற்பது வருடங்களிற்கு மேலாக நாவற்காடு, குடமியன், வரணி, இயற்றாலை முதலான பகுதிகளில் உள்ள 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றன.

எனினும் சடலங்களை வைத்து எரியூட்டக்கூடிய மேடை அமைக்கப்படவில்லை. அத்துடன் மழை காலங்களில் சடலங்கள் நனையாதவாறு தகனம் செய்யக்கூடிய கொட்டகை வசதிகள் எவையும் இல்லை. இதனால் வெறும் நிலத்திலேயே தகனம் செய்யவேண்டிய நிலைமை உள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த மயானத்திற்குச் செல்லும் வீதியும் கடந்த முப்பது வருடங்களிற்கு மேலாக திருத்தப்படாமல் உள்ளது. இம்மயானத்தில் உள்ள கிணறும் பழுதடைந்துள்ளதுடன், இளைப்பாறும் மண்டபமும் இல்லாது உள்ளது.

எனவே இந்த விடயத்தினை உரிய அதிகாரிகள் கவனமெடுத்து குடமியன் இந்து மயானத்தை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# மறவன்புலோ வள்ளிக்குள பிள்ளையாரில் 13 வருடங்களின் பின்னர் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - மறவன்புலோவில் புகழ்பெற்ற ஆலயங்களில் ஒன்றான மறவன்புலோ மத்தி வள்ளக்குளம் பிள்ளையார் கோவிலில் தைப்பொங்கல் நிகழ்வுகள் அண்மையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

குடாநாட்டில் அதிகளவில் நெற்பயிர்ச்செய்கையினை தன்னகத்தே கொண்ட மறவன்புலோவில் விவசாயிகள், மறவன்புலோ பொது அமைப்புக்கள் ஒன்றாக இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தப் பொங்கல் விழாவில் சுமார் நூற்றுக்கும் மேறப்பட்ட மண் பானைகளில் பாரம்பரிய முறைப்படி பொங்கல் பொங்கி படைக்கப்பட்டது. பொங்கல் பொங்குவதற்கான மண் பானைகளை ஆலய பரிபாலன சபை அன்பளிப்பாக மக்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



வள்ளக்குளம் பிள்ளையார் ஆலய பரிபாலனசபையின் மூத்த ஆலோசகராக விளங்கும் மறவன்புலோ சச்சிசானந்தம் ஐயாவின் ஆலோசனைக்கு அமைவாக மறவன்புலோ கிராம சேவையாளர், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய பழைய மாணவர் சங்கம், கமக்கார அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகியன இந்நிகழ்விற்கான திட்டமிடலை மேற்கொண்டிருந்தன.

மறவன்புலோ கிராமத்தில் நடைபெற்ற இப்பொங்கல் விழாவில் மறவன்புலோ கலைஞர்களினால் கிராமிய நடனம், குழுப்பாட்டு உள்ளிட்ட சிறுசிறு நிகழ்வுகளும் இடம்பெற்றன

# முரசின் இன்றைய பலன்

(29.01.2013 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 16 ஆம் திகதி. நட்சத்திரம் மகம் முன்னிரவு 7.12 வரை. சித்தம். திதி துதியை பிற்பகல் 12.02 வரை. இராகுகாலம் 3.36 - 05.06 வரை. சுபநேரம் 11.06 - 12.36 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்பத்தினர் பாசம். நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், புதிய உபாயங்கள். உபரி வருமானம். சக ஊழியர் ஆதரவு, திருப்திகர சன்மானம். |
| ரிஷபம் | உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். திட்டமிட்டது நிறைவேறும் அனுகூலம். தொழில், அதிக மூலதனம். சராசரி பணவரவு. நண்பர்களின் உதவி. |
| மிதுனம் | பெருந்தன்மை குணம். பிறருக்கு உதவுவீர்கள். வேலைப்பளு அதிகரிக்கும். வரவு செலவாகும். ஒவ்வாத உணவு விலக்குக. சம்பளம், பதவி உயர்வு. |
| கடகம் | கூடுதல் திறமை மிளிரும். வாழ்வில் புதிய நம்பிக்கை. தொழில் சிறந்து, வரவு கூடும். நிலம் தொடர்பில் அனுகூல பலன். உறவினர் வருகையால் மகிழ்ச்சி. |
| சிம்மம் | மனதில் தெய்வ நம்பிக்கை. தொடங்கிய செயல் எளிதாக நிறைவேறும். தொழில், புதிய தொடர்புகள். உபரி வருமானம். தான, தருமம் செய்வீர்கள். |
| கன்னி | மனதில் உற்சாகமும், கலை உணர்வும். எவரிடமும் நல்அன்பு. தொழில், வளர்ச்சி. ஊக்கமுடன் உழைப்பு. தாராள பணவரவு. நினைத்தது வாங்குவீர்கள். |
| துலாம் | சிலர் எதிர்மறையாக நடப்பர். நிதானித்து நடத்தல் நல்லது. தொழில் சில குறுக்கீடுகள் வரும். சேமிப்பு செலவுக்கு பயன்படும் வாகன பயணத்தில். |
| விருச்சிகம் | செயல்பாடுகளில் கவனம் வேண்டும். தேவையற்றவை பேச வேண்டாம். தொழில், தாமதம். புதிய இனங்களில் செலவு. ஓய்வு அவசியம். |
| தனுசு | மாற்று சிந்தனைகள் யோசிப்பீர்கள். தொழில், இடையூறு சரிசெய்வீர்கள். அளவான பணவரவு. புத்திரரைத் திருத்துதல். உடல் நலம் மந்தம். |
| மகரம் | தேவையற்ற வாக்குறுதி தரவேண்டாம். தொழில், மாறுபட்ட சூழ்நிலை. வரவும் செலவும் சமம். உறவினர் உங்களால் மகிழ்வர். உடல்நலம் சீர். |
| கும்பம் | உங்களை புகழ்ந்து பேசுபவர்களிடம் கவனம். தொழில், குளறுபடி வந்து சரியாகும். அளவான பணவரவு. குடும்பத் தேவைக்கு கடன். |
| மீனம் | மிகுந்த பொறுமையுடன் செயற்படுவீர்கள். தொல்லை கொடுத்தவர், விலகுவர். தொழில், புதிய சாதனை. பணவரவும், நன்மையும். |

# தொடரை வென்றது இலங்கை




அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி–20 போட்டியில் இலங்கை அணி பரபரப்பான கட்டத்தில் த்ரில் வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்டு ருவென்ரி–20 தொடரை 2–0 என்ற கணக்கில் இலங்கை அணி முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி–20 கிரிக்கெட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் நேற்று மெல்பேர்னில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இலங்கை அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. முதலாவது விக்கெட்டை 15 ஓட்டங்களுக்கும், இரண்டாவது, மூன்றாவது விக்கெட்டுக்களை 33, 39 ஓட்டங்களுக்கும் இழந்து பெரும் தடுமாற்றத்தைச் சந்தித்தது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த மெண்டிஸ், மஹேல ஜெயவர்த்தனவுடன் இணைந்து பொறுப்புடன் ஆடினார். இந்த இணை 63 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய திசர பெரேரா மஹேலவுடன் இணைந்த அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மஹேல ஜெயவர்த்தன 45 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும், திசர பெரேரா 15 பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும், மெண்டிஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மைக்வெல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பதிலுக்கு 161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டையும், 20 ஓட்டங்கபைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது விக்கெட்டையும் இழந்து தடுமாறியது. இந்நிலையில் இணைந்த மார்ஸ், ஜோர்ஸ் பெய்லி இணை பொறுப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இந்நிலையில் 10 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழைகுறுக்கிட்டதால் போட்டி தடைப் பட்டது. தொடர்ந்து ஐந்து ஓவர்கள் குறைக்கப்பட்டு, 15 ஓவர்களில் 122 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு அவுஸ்ரேலிய அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆடி அவுஸ்ரேலிய அணி மூன்று ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 15 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோர்ஜ் பெய்லி 45, மார்ஷ் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மெ:ண்டிஸ், குலசேகர தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் இரண்டு போட்டி களைக் கொண்ட ருவென்ரி–20 தொடரை 2–0 என்ற கணக்கில் இலங்கை அணி முழுமையாகக் கைப் பற்றியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக திசர பெரேர தெரிவானார்.



## பிரதம பயிற்சியாளராக ஜோன் ரைட் நியமனம்



(மும்பை)

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விளையாடும் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராக நியூசிலாந்தைச் சேர்ந்த முன்னாள் வீரர் ஜோன் ரைட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை இந்திய அணியின் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

முந்தைய பயிற்சியாளர் ரொபின் சிங்கும் தொடர்ந்து தனது சேவையை மும்பை அணிக்கு அளிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த அனுபவம்

இந்திய அணிக்கெதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்ற முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. இருப்பினும், கடைசிப் போட்டியில் வெற்றி பெற்று, தொடரை வெற்றியுடன் முடித்தது மகிழ்ச்சியான விடயம் என இங்கிலாந்து அணிக் கப்டன் அலெஸ்டர் குக் தெரிவித்தார்.

இந்திய அணிக்கெதிரான ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் எங்கள் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். பிரெஸ்னன், ஸ்டீவன் பின் துல்லியமாகப் பந்துவீசி, இந்திய அணியின் ஓட்ட வேட்டையைத் தடுத்தனர். நாணயச் சுழற்சியில் வென்றது, வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. துடுப்பாட்டத்தில் பெல் அருமையாக விளையாடி, சதம் அடித்தார். டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர் சிறந்த அனுபவம் அளித்தது. அடுத்து இடம்பெறும் நியூசிலாந்துடான தொடரை கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. சிறப்பாகச் செயற்பட்டு தரப்படுத்தலில் இழந்த முதலிடத்தை மீண்டும் பிடிப்பதே எமது இலக்கு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சவால் நிறைந்த தொடர்



டெஸ்ட் தொடரைக் காட்டிலும், ஒரு நாள் தொடர்சவால் நிறைந்ததாகஇருந்தது. தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான கடைசிப் போட்டியில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால், கூடுதலாக 30-35 ஓட்டங்கள் சேர்க்கத் தவறியதால், தோல்வி அடைய நேரிட்டது. அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு, இத்தொடர் சிறந்த அனுபவம் அளித்திருக்கும். இத்தொடர் மூலம் நிறைய விடயங்களை அறிந்திருப்பார்கள். பந்து வீச்சு அருமையாக இருந்தது. குறிப்பாக இஷாந் ஷர்மா சிறப்பாகப் பந்துவீசினார். இதே போல, களத்தடுப்பில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. ரவீந்திர ஜடேஜா சகல துறை வீரராக எழுச்சி கண்டது அணிக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை அணியில் வாஸ்



(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான சமிந்த வாஸ் இலங்கை அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தின் பின்னர் தற்போது இலங்கை அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக கடமையாற்றும் சம்பிக்க ராமநாயக்கவுக்கு பதிலாக சமிந்த வாஸ் நியமிக்கப்டலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணியின் விசேட பந்து வீச்சு ஆலோசகராக சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டிருந்தார். இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரைச் சமப்படுத்த சமிந்த வாஸின் ஆலோசனையே பெரும் உதவிபுரிந்தது என நியூசிலாந்து அணி முன்னாள் கப்டன் டெய்லர் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலியாவின் ஜர்மிலா -மேத்திவ் ஜோடி கிண்ணத்துடன் காட்சி கொடுப்பதைக் காணலாம்.



## டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பேன்



கடந்த ஆண்டு டெஸ்ட் அணியில் இருந்து ரெய்னா நீக்கப்பட்டார். இந்த நிலையில் டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன் என்று ரெய்னா நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

டெஸ்டில் கடைசியாக நான் விளையாடிய 3 இனிங்ஸில் ஒரு அரைச் சதம் அடித்துள்ளேன். இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தியிருப்பது மீண்டும் டெஸ்ட் அணியில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை உருவாகியிருக்கின்றது. அடுத்து இடம்பெறவுள்ள அவுஸ்ரேலிய அணியுடனான தொடரில் எனக்கும் அணியில் இடம் கிடைக்கும் என நம்புகின்றேன் எனவும் 'அவர் தெரிவித்தார். . 17 டெஸ்ட் போட்டியில் ஆடியுள்ள ரெய்னா 768 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணி அடுத்த மாதம் இந்தியா சென்று, 4 டெஸ்டில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# பிரதேச மட்ட எல்லே போட்டி

## நெடுந்தீவு சென். ஜோன்ஸ், உதயசூரியன் சம்பியன்







(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எல்லே போட்டியில் ஆண்கள் பிரிவில் சென்.ஜோன்ஸ் அணியும், பெண்கள் பிரிவில் உதயசூரியன் அணியும் சம்பியனாகின.

பதிவு செய்யப்பட்ட நெடுந்தீவுப் பிரதேச அணிகளுக்கிடையிலான விளையாட்டு விழாவின் முதற்கட்டமாக பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் ஆண், பெண்களுக்கான எல்லே போட்டி கடந்த 25ஆம் திகதி நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் நடைபெற்றது. ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் அணியும், சென். அன்ரனீஸ் யூத் அணியும் மோதின. இதில் அபாரமாக செயற்பட்ட சென். ஜோன்ஸ் அணி 11-03 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். அன்ரனீஸ் அணியும், வளர்மதி அணியும் மோதின. இதில் சென். அன்ரனீஸ் அணி 21-05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் அணியும் சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இரு அணிகளும் பலமான அணி என்பதால் இறுதிப் போட்டி விறுவிறுப்பு நிறைந்ததாக இடம்பெற்றது. பரபரப்பான இப்போட்டியில் சென். ஜோன்ஸ் அணி 07-05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச மட்டத்தில் சம்பியனானது.

இதனைத் தொடர்ந்து பெண்களுக்கான போட்டிகள் இடம்பெற்றது. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் வளர்மதி அணியும், உதயசூரியன் அணியும் மோதின. இப்போட்டியில் உதயசூரியன் அணி 2-1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. மற்றொரு அரையிறுதியில் சென். அன்ரனீஸ் அணியும், சென். அன்ரனீஸ் யூத் அணியும் மோதின. இதில் சென். அன்ரனீஸ் அணி 2-1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இறுதியில் போட்டியில் உதயசூரியன் அணியும், சென். அன்ரனீஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் உதயசூரியன் அணி 2-1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று பிரதேச மட்ட சம்பியனானது. இப்போட்டி நிகழ்வில் விளையாட்டுத்துறையைச் சேர்ந்த பல அதிகாரிகள், ஆர்வலர்கள், கழக உறுப்பினர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (93)

## நிறைவேற்று அதிகாரி பதவிக்கு பன்துல வர்ணபுரவுக்கு வாய்ப்பு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி பதவிக்கு, முன்னாள் தலைவர் பன்துல வர்ணபுர நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை கிரிக்கெட் சபையின் தற்போதைய நிறைவேற்று அதிகாரியாக இருக்கும் அஜித் ஜயசேகரவின் பதவிக் காலம் மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இலங்கை அணியின் டெஸ்ட் தலைவரான வர்ணபுர இதற்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் சபையில் செயற்பாட்டுப் பிரிவின் இயக்குநராக எட்டு ஆண்டுகள் செயற்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவர் ஆசிய கிரிக்கெட் சபையின் அபிவிருத்தி முகாமையாளராக 2008 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். எனினும் அவர் இலங்கை கிரிக்கெட்டின் நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டாலும், அந்தப் பதவி யில் மே முதலாம் திகதி வரைதான் செயற்படுவார் என இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இது தொடர்பில் பரிந்துரைக்கப்பட்ட ஏனையோருடன் வர்ணபுரவும் கடந்த வாரம் இலங்கை கிரிக்கெட்டின் நேர்முகப் பரீட்சைக்கு முகம் கொடுத்துள்ளார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மற்றும் மித வேகப்பந்து வீச்சாளராக செயற்பட்ட பன்துல வர்ணபுர, இலங்கையின் முதலாவது டெஸ்ட் போட்டியான 1982 இல் இங்கிலாந்துடனான ஆட்டம் உட்பட நான்கு டெஸ்ட்களிலும் 12 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். எனினும் நிற வெறி காரணமாக தடைசெய்யப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணியுடன் கிரிக்கெட் விளையாடச் சென்றதால் பன்துல வர்ணபுர கிரிக்கெட்டில் தடையைச் சந்தித்தார். இலங்கையின் கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி பதவி கிடைத்தால் மகிழ்ச்சி. கிடைக்கும் பட்சத்தில் அதனை முன்னேற்ற பல திட்டங்கள் உள்ளது என வர்ணபுர தெரிவித்துள்ளார்.

## கொக்குவில் கே.சி.சி.சி. கிரிக்கெட்

## 2ஆவது சுற்றில் காமாட்சி, ஸ்ரான்லி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் காமாட்சி மற்றும் ஸ்ரான்லி அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்குகொள்கின்றன.

இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்து கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இரண்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலாவதாக நடைபெற்ற போட்டியில் யங்ஸ்ரார் அணியும், காமாட்சி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய காமாட்சி அணி 30 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கார்த்திக் 42, சுயன் 33, திவாகர் 24, தீபன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கமல் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யங்ஸ்ரார் அணி 28.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கமல் 52, லோஜிதரன் 21, பார்த்தீபன் 13, ரஜீவன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கார்த்திக் மூன்று, சசி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் கிறாஸ் ஹோப்பர் அணியும், அரியாலை ஐக்கிய அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அரியாலை ஐக்கிய அணி 30 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதர்சன் 62, நிரோசன் 54, கிருபா ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரவி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 211 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ் ஹோப்பர்ஸ் அணி 16 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றுப் படுதோல்வியடைந்தது. இதில் நிரோசன் மட்டும் 13 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் நிரோச், சுதர்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் காலையில் நடைபெற்ற போட்டியில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியினை எதிர்த்து யூனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட்ஸ் அணி 30 பந்துப்பரிமாற்றங்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 18.2 பந்துப்பரிமாற்றங்களில் 95 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (42)

விளையாட்டுச் செய்திகள்

முன்னாள் சிறுவர்போராளிகளை மீள் ஒருங்கிணைப்பு



ஒருங்கிணைப்பு செய்வதில் ஒரே மாதிரியான பிரச்சினைகள் உள்ளதாகவும் அல்லது சிலவேளைகளில் நிலைமை இலங்கையை விட மோசமாக உள்ளதாகவும் ஒரேமாதிரியான கருத்தை அளித்துள்ளது. சில நாடுகளில் மோதல்கள் இன்னமும் நிலவுகின்றன மற்றும் விடுவிக்கப்பட்ட சிறுவர்போராளிகள் இன்னமும் அச்சத்திலேயே வாழவேண்டியுள்ளது. அதாவது கிளர்ச்சியாளர்கள் அவர்களை திரும்பவும் பிடித்துச் செல்கிறார்கள், அதிகாரிகளால் துன்புறுத்தப் படுகிறார்கள், கடந்த கால அட்டூழியங்களுக்காக அவர்களது சமூக அங்கத்தவர்கள் அவர்களுக்கு தீங்கு செய்ய முயல்கிறார்கள்.

போராளிகளை, சமூகத்துடன் மீள் ஒருங்கிணைப்பு செய்யவேண்டியது அரசாங்கத்தினதும் இதர சர்வதேச முகவர்களினதும் தலையாய கடமை. சிறுவர்போராளிகளை வெற்றிகரமாக சமூகத்துடன் மீள் ஒருங்கிணைப்பு செய்துள்ளதாக உலகிலுள்ள அநேக நாடுகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றிலேயே மிகவும் விரிவான ஒன்றாக இடம்பெற்ற, அங்கோலாவின் படைக்கலைப்பு நடவடிக்கைகள், 1995 முதல் 1997 வரை இடம்பெற்றது. ஒருவேளை சிறுவர்களை விசேடமாக சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுத் தியது அதுதான் முதல் முறையாக இருக்கலாம். அதேவேளை 1994இல் இடம்பெற்ற லுசாக்கா நெறிமுறையில் படைக்கலைப்பு மற்றும் மீள் ஒருங் கிணைப்பு என்பனவற்றுக்கு, முன்னுரிமை அறிவிக்கப்பட்டிருந்தது. உள்ளூர் சிவில் சமூக அமைப்புகளின் வலையமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டதால், அநேக சிறுவர்கள் தங்களது வீட்டுக்கு திரும்பி வர அது சாதகமாக அமைந்தது. (வேர்ஹே 2001)

நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், குடும்ப ஆதரவு மற்றும் பொருளாதார வாய்ப்புகள் போன்ற மோதலுக்கு பிந்தைய அனுபவங்கள், மனநல ஆரோக்கியத் தில் வகித்த பாத்திரத்தை பற்றி மீள் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு 16 வருடங்களின் பின்னர் 39 மொசாம்பிய ஆண்களிடத்தல் நேர்காணல் செய்யப்பட்டு

# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 14

– ருவான் எம் ஜயதுங்க –

செய்வது சவாலான ஒன்றாகும். சில சிறுவர்களுக்கு குடும்பங்கள் கிடையாது, ஒன்றில் அவர்கள் நாட்டை விட்டு ஓடிவிட்டார்கள் அல்லது போரில் கொல்லப்பட்டு விட்டார்கள். அநேக முன்னாள் சிறுவர்போராளிகளை அவர்களது சொந்த சமூகத்துடன் மீள் ஒருங்கிணைப்பு செய்யப்படு வதில் பல்வேறு சிக்கல்கள் இணைந்துள்ளன. சிறுவர்போராளி கள் அடிக்கடி உளவியல் மற்றும் சமூக பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். சிலவேளை களில் அவர்களது சமூக அங்கத்தவர்கள் அவர்களது யுத்தகால நடவடிக்கைகளைக் கண்டு அச்சமுற்று அவர்களை தீண்டதகாதவர்களாக ஒதுக்கி வைத்துள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தச் சிறுவர்களில் சிலர் அவர்களது உறவினர்களைக் கொன்றோ அல்லது சித்திரவதை செய்தோ இருக்கலாம். இத்தகைய காரணிகள் சிறுவர்போராளிகளைத் திரும்பவும் சமூகத்துடன் மீள் ஒருங்கிணைப்பு செய்து அவர்கள் அர்த்தமுள்ளதும் உற்பத்தித் திறன் மிக்கதுமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கு தடையாக உள்ளன.

ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஏராளமான ஆராய்ச்சிகள், முன்னாள் சிறுவர்போராளிகளை மீள்




குலு உகண்டா நாட்டு சிறுவர்களை காப்போம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் 2004 - 2005 காலப்பகுதியில் 300 முன்னாள் சிறுவர்போராளிகளைக் காப்பாற்றி சமூகத்துடன் மீள் ஒருங்கிணைப்பு செய்து, ஒருமாதம் கடந்த பின்னர் அவர்களில் ஒருவர்கூட அவர்கள் வழக்கமாக வாழவேண்டி மீள் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட சமூகத்துடன் வாழவில்லை என்பதை கண்டார்கள். (அக்கெலோ, றிச்சட்டர்ஸ் மற்றும் றெயிஸ், 2006)

இந்தச் சூழ்நிலைகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் நிலைமை எவ்வளவோ சாதகமாக உள்ளது. 2009 இலிருந்து எல்.ரி.ரி.ஈ ஒரு இராணுவ அமைப்பாக இலங்கையில் செயற்படவில்லை எனவே இலங்கை முன்னாள் சிறுவர்போராளிகள் மீண்டும் பிடிக்கப்படும் அபாயம் கிடையாது. முன்னாள் சிறுவர்போராளிகளை இலங்கை அதிகாரிகள் போரினால் பாதிக்கப்பட்டவர்களாக கருதுகிறார் களே தவிர குற்றமிழைத்தவர்களாகக் கருதவில்லை. முன்னாள் சிறுவர்

அது தெளிவாக இடம்பெறவில்லை. ஆயினும் சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த அமைக்கப்பட்ட ஆணைக்குழு மேற்கொண்ட முதலாவது தீர்மானத்தில் அவர்களது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது (பூத்பை, குரொபோர்ட் மற்றும் ஹல்பெரின், 2006).

(தொடரும்)

# கும்கியின் குணங்கள்



- லோகநாதன் -

சினிமாக்களில் காட்டுவது போல, கும்கி யானையை தனியார் வளர்க்க முடியாது. அரசாங்கத்தின் வனத்துறையினர்தான் வளர்க்க முடியும். காட்டில் இருந்து நாட்டிற்குள் வரும் யானையை விரட்டியடிக்க, பயிற்சியளிக்கப்பட்ட யானையே கும்கி. குட்டியில் இருந்தே சரியான யானையை அடையாளம் கண்டு, அதற்கு கடுமையான பயிற்சி கொடுத்து, வனத்துறையினர் வளர்த்து வருவர். இந்த கும்கி யானை கூட, பெண் யானையைத்தான் விரட்ட முடியும். இதைவிட உயரமான, “டஸ்கர்” என்று சொல்லக் கூடிய பத்து அடி உயரத்திற்கு மேற்பட்ட ஆண் யானையைக் கண்டால், கும்கி யானையே ஓடி வந்துவிடும். அந்த மாதிரி யானையை இரண்டு கும்கி யானைகளைக் கொண்டுதான் விரட்டுவர்.

முதலில் ஒரு இடத்தில் யானைகள் நன்றாக இருக்கிறது என்றால், அங்கு காடு நன்றாக இருக்கும். காடு எங்கு நன்றாக இருக்கிறதோ, அங்கு நாடும் நன்றாக இருக்கும். ஆகவே, யானைகளை எப்போதுமே குற்றம் சொல்லக் கூடாது. அதன் ஒவ்வொரு செயலுக்கும் அர்த்தம் உண்டு. அதை புரிந்து கொள்ளாமல், அதன் வழித்தடத்தில் வீடுகளையும், ஆசிரமங்களையும், கல்லூரிகளையும் கட்டிவிட்டு, யானை வருகிறது, யானை வருகிறது என்றால்... அது பல நூறு ஆண்டுகளாய் வந்து போய்க்கொண்டிருந்த வழித்தடத்தில், வராமல் வேறு என்ன செய்யும்? வழித்தடம் மாறும் போதும், உணவிற்கு வழியில்லாத போதும், வயலுக்கு வருகிறது, ஊருக்குள் புகுகிறது.

சினிமாக்களில் காட்டுவது போல, யானைகள் மோசமான மிருகம் அல்ல. தன்னை சீண்டுபவனையும், துன்புறுத்துபவனையும் தான், யானை தாக்குமே தவிர, மற்றபடி அது சாதுவான விலங்கு. பொது வாக யானைக்கு மதுவின் வாடை பிடிக்காது. குடித்துவிட்டு பக்கத்தில் வருவது பாகனே ஆனாலும், பொறுத்துக் கொள்ளாது. அதே நேரம், குட்டி போட்டு இருக்கும் நேரத்தில், யாராக இருந்தாலும் குட்டியிடம் நெருங்க விடாது. அந்த அளவிற்கு பாசம் அதிகம். மனிதர்களைப் போல, குட்டிக்கு தும்பிக்கை வழியாக மூச்சு காற்றை செலுத்தி, பிழைக்க வைத்த நிகழ்ச்சி எல்லாம் உண்டு.

பத்து கி.மீ. சுற்று வட்டாரத்தில் உள்ளவைகளை மோப்பம் பிடித்தே அறிந்து கொள்ளும். யானைக்கு கழுத்துப் பகுதி கிடையாது என்பதால், திரும்பிப் பார்க்க வேண்டும் என்றால், அது உடம்பையே திருப் பித் தான் பார்க்குமே தவிர, கழுத்தை மட்டும் திருப்பிப் பார்க் காது. அதே போல, யானைக்கு நேர் பார்வைதான் உண்டு. அது விரட்டும் போது, நேர் பார்வையில் படாமல் பக்கவாட்டில் தப்பி ஓடினாலே பிழைத்துக் கொள்ளலாம்.

# தேனி நடனம் தெரியுமா?



- தேனீக்களுக்கு ஐந்து கண்கள் உள்ளன.
- ஒவ்வொரு ஆண்டும் பாம்புகளால் கடிபட்டு இறப்பவர்களைவிட தேனீக்களால் இறப்பவர்கள் எண்ணிக்கை அதிகம்.
- தேனீ, மனிதனை ஒருமுறை கொட்டினாலே அதன் கொடுக்கை இழந்துவிடுகிறது.
- தேனீ ஒரு செய்தியை தன் இனத்தில் உள்ள மற்றொரு தேனீயிடம் "8" என்ற எண் வடிவத்தில் நடனமாடித் தெரிவிக்கிறது.
- கண்ணுக்குப் புலப்படாத ஒளியைக்கூட தேனீயால் பார்க்க முடியும்.
- ஒரு தேன்கூட்டில் 50,000 முதல் ஒரு லட்சம் வரை தேனீக்கள் இருக்கும்.

# தேவனே என்னைப் பாருங்கள்!

நடிகர் திலகம் நடித்த, "ஞான ஒளி" படத்தில் இடம்பெற்ற, "தேவனே என்னைப் பாருங்கள் - என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்..." என்ற பாடலை மறக்க முடியுமா? எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்த இந்தப் பாடலின் நடுவே... "ஓ... மைலோர்ட்... பார்டன் மீ... உங்கள் மந்தையில் இருந்து இரண்டு ஆடுகள் வேறு வேறு பாதையில் போய் விட்டன... இரண்டும் சந்தித்த போது... பேச முடியவில்லையே..." என்று, உணர்வுபூர்வமான வசனங்கள் வரும்.

டி.எம்.எஸ். பாடிய அந்தப் பாடலில் வரும் மேற்படி வசனங்களை மட்டும், நடிகர் திலகத்தையே பேசும்படி எம்.எஸ்.வி. வேண்டுகோள் விடுத்தார். "இந்த வசனங்கள், பாடலில் எந்த இடத்தில் வருகின்றன என்பதை, பாடிக் காட்டுங்கள்..." என்று எம்.எஸ். விஸ்வநாதனிடம் சிவாஜி கேட்க, உடனே எம்.எஸ்.வி. "ஆயிரம் நன்மை தீமைகள் நாங்கள் செய்கின்றோம்...



நீங்கள் அறிவீர்... மன்னித்தருள்வீர்..." என்று பாடிக் காட்டி... "இந்த இடத்தில் தான் நீங்கள்... அந்த வசனத்தைப் பேச வேண்டும்..." என்றார்.

"இவ்வளவு உச்ச ஸ்தாயியில் கொண்டு போய் பாடலை நிறுத்தி இருக்கிறீர்களே... அதற்கு ஈடுகொடுத்து என்னால் பேச முடியாது என்றே நினைக்கிறேன். வேறு பொருத்தமானவரை அழைத்து, அந்த வசனங்களைப் பேச வையுங்கள்..." என்றார் சிவாஜி.

வயலின் வாத்தியக் கலைஞரும், தம் உதவியாளருமான ஜோசப் கிருஷ்ணாவை அழைத்து, அந்த வசனங்களைப் பேச வைத்துப்பார்த்தார் எம்.எஸ்.விஸ்வநாதன். ஆனால், அவரது குரல் அந்தப் பாடலின் வீச்சுக்குப் பொருந்தி வரவில்லை.

"பலகுரல் வித்தகர்" சதன் என்பவரைக் கூப்பிட்டு, இதே வசனத்தைப் பேச வைத்தார். ஆனால், அதுவும் பாடலின் போக்கோடு ஒன்றிப் போகாமல் தனித்து நின்றது. நடப்பதை எல்லாம் தூரத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இயக்குனர் கிருஷ்ணன் - பஞ்சு, எம்.எஸ்.வி யிடம், "பாடலைப் பாடிய டி.எம்.எஸ்சையே அந்த வசனங்களையும் பேச வைத்துப் பார்க்கலாமே..." என்றார்.

எம்.எஸ்.வி. - டி.எம்.எஸ். சிடம் அந்த வசனங்களைக் கொடுத்துப் பேசுமாறு வேண்டினார்.

டி.எம்.எஸ். உடனே நடிகர் திலகத்திடம் சென்றார். அந்த வசனங்களை அவரிடம் கொடுத்தார். "உங்கள் சிம்மக்குரலில்... அந்த வசனங்களை, ஒரு தடவை எனக்கு பேசிக் காட்டுங்கள் அய்யா..." என்றார்.

நடிகர் திலகம், அந்த வசனங்களை தம் பாணியில் டி.எம்.எஸ்சிடம் பேசிக் காட்டினார். அந்த வசனங்களைப் பேசிய போது, நடிகர் திலகத்தின் குரலில் இருந்த பாவங்களையும், ஏற்ற இறக்கங்களையும் உணர்வுக் குமிழிகளையும் தம் மனதில் உள் வாங்கிக் கொண்டார் டி.எம்.எஸ். "நான் தயார்... ஒலிப்பதிவை ஆரம்பிக்கலாமா?" என்று டி.எம்.எஸ். சொன்னதும்... எம்.எஸ்.வி. கையசைத்தார்.

ஏக்கமும், விரக்தியும் தேவ விசுவாசமும் கொண்ட ஒரு பக்தனின், "ஞானத் தேடல்" விளங்கும் விதமாக அந்த வசனத்தைப் பேசினார் டி.எம்.எஸ்.

"அருமை டி.எம்.எஸ். அற்புதம்..." என்று பாராட்டினார் சிவாஜி.

- நாராயணன் -

## செம்புச் சக்தி

செம்புச் சத்து மருத்துவ குணங்களை உடையது. உதாரணமாக, இரத்தத்திலுள்ள செங்குருதிச் சிறுதுணிக்கைகள் செம்புச் சக்தியினால் வளருகின்றன. தொழுநோய் மற்றும் பல தோல் வியாதிகள் செம்புச் சக்தியினால் குறைவதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. இந்தச் செம்புச் சத்தை நாம் பாக்கு, செங்கீரை, கோவைக்காய், ஓரிதழ் தாமரை, வாழை, செந்தாமரை, தும்பை, சிறுகீரை ஆகியவற்றின் மூலம் எளிதாகப் பெறலாம்.



# குற்றங்களின் காரண கர்த்தாக்களுக்கு என்ன தண்டனை?

**"இந்தக் குடும்ப அமைப்பும் சமூகமும் பெண்கள் குறித்து என்ன பார்வையை, வளரும் குழந்தையின் மனதில் பதியவைக்கிறது? கள்ளங்கபடம் இன்றிப் பழகும் குழந்தைகளில், பெண் குழந்தை பெரியவளானதும், ஆண்களுடன் பேசத் தடை விதிப்பது, அவளை விளையாட அனுப்பாமல் வீட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்வது போன்ற நடை முறைகள் இன்றும் தொடரத்தான் செய்கின்றன"**

எதிர்பாராத நேரத்தில் சொக்காயைக் கொத்தாகப் பற்றி செவிட்டில் பொளேர்ர்ர்ர்... என்று அறைந்தது போலிருந்தது, விகடனில் வெளியான ஒரு கட்டுரையில் இருந்த, மேலுள்ள பகுதி. "பொண்ணுங்கன்னா எப்படி இருக்கணும் தெரியுமா?" என்பதில் ஆரம்பித்து, "என்ன உடை அணிய வேண்டும், எந்த செருப்பு போட வேண்டும், கொண்டையில் எத்தனை ஊசி குத்திக் கொள்ள வேண்டும், பெண் தன் உடலை எப்படி கவர்ச்சியாக காட்ட வேண்டும், அந்தப் பெண்ணை எப்படி மூர்க்கமாக அடைய வேண்டும்" என்பது வரைக்கும் பாடம் நடத்தும் எம்.ஜி.ஆர் - சிவாஜி, ரஜினி - கமல் முதல் அஜித் - விஜய், தனுஷ் - சிம்பு வரை பாடம் நடத்தும் பேட்டிகளையும் அவர்களைப் பற்றிய செய்திகளையும் கிசுகிசுக்களையும் வெளியிட்டு கல்லா கட்டும் விகடனின் பக்கங்களில் இருந்து இப்படியொரு "சத்தியாவேச" ஜுவாலை குப்பென்று பற்றியெரிவதைப் பார்த்ததால் ஏற்பட்ட விளைவு அது. இருக்காதா பின்னே, ரெண்டு சைக்கிள் பிராண்டு ஊதுவத்தியை செப்டிக் டேங்கினுள் சொருகி வைத்து விட்டு முகர்ந்து பார்க்கச் சொன்னால் இப்படித்தானே இருந்தாக வேண்டும்?

**"வீடுகளிலும் கல்விக்கூடங்களிலும் மட்டும் அல்ல, பொழுதுபோக்கச் செல்லும் திரையரங்குகளில் காட்டப்படும் திரைப்படங்களும், விளம்பரங்களும் பெண்களை நுகர்வுப் பொருளாக சித்தரிக்கின்றன" - [மேற்படி கட்டுரை. பக்கம் 13]**

வாசித்துக் கொண்டிருக்கும் போதே லேசாக வீசிய காற்றில் வாசித்துக் கொண்டிருந்த பக்கம் புரண்டு அடுத்த பக்கத்தில் நின்றது. "நயன்தாரா யாருக்கு?" ஸ்டார் "பிரதர்ஸ்" வார்" என்கிற தலைப்பு கண்களைப் பிடுங்கியது. மேலே கட்டுரையில் அடுக்கியிருக்கும் காரணங்களில் "பத்திரிகைகளிலும்" என்பது மட்டும் எப்படியோ மிஸ் ஆகி விட்டிருப்பது தற்செயல் என்றே சத்தியமாக "நம்பி" விட்டேன். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக்கூடாது என்பது எந்தப் பெண்ணியத்தில் வரும் என்று உலக இலக்கியங்களை ஆராய்ந்தும் வருகிறேன்.

கடைசியில் கட்டுரையாளர், இவ்வாறு முடிக்கிறார்,

**"மாற்றங்கள் நம்மிடம் இருந்து தொடங்க வேண்டும். நம் துறையில் இருந்து தொடங்க வேண்டும். நம் வீடுகளில் இருந்து தொடங்க வேண்டும்" - [மேற்படி கட்டுரை. பக்கம் 13.]**

இங்கேயும் "நாம் வேலை பார்க்கும் பத்திரிகையிலிருந்து தொடங்க வேண்டும்" என்கிற வரி தற்செயலாக மிஸ் ஆகிவிட்டது என்று சத்தியமாக "நம்புகிறேன்".

சமூகத்தில் ஆணாதிக்கக் கருத்துக்கள் ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பது உண்மை தான். ஆம்பிள்ளைத் திமிரோடு வளர்க்கப்படும் பொறுக்கிகள் வாய்ப்புக் கிடைக்கும் போது பெண்களின் மேல் பாய்ந்து குதறுகிறார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், இந்தத் திமிர்த்தனத்திற்கு ஒரு வெகுஜன அங்கீகாரம் வழங்குவது யார்? இதை ரசிக்கத்தக்க குறும்புகளாக கல்லா கட்டுகின்றன.


பெண்கள் என்றால் சமைக்க வேண்டும் - ஆண் சமைப்பது கேலிக்குரியது என்பதை மொக்கை ஜோக்குகள் மூலம் சொல்லி விட்டு, நேரடியாக பெண்களுக்கு சமையல் குறிப்புகளை எழுதுகிறார்கள். பெண்கள் என்றால் அழகாய் இருக்க வேண்டும், அழகு படுத்திக் கொள்ள வேண்டும் - அதற்கு அழகுக் குறிப்புகள், பெண்கள் என்றால் புறணி பேசுவார்கள், குடும்பச் சண்டைகளில் இறங்குவார்கள் - இதற்கு மாமியார் மருமகள் மொக்கைகள். இவ்வாறு ஏற்கனவே கற்றுக் கொடுப்பது யார்? அங்கே தான் வருகிறார்கள் விகடன், குமுதம் மாமாக்கள்.

பாலியல் உணர்ச்சிகளைப் பொறுத்தவரை விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இருக்கும் ஒரே வேறுபாடு - மனிதர்களுக்கு இருக்கும் சமூக உறவும், அந்த உறவின் பாற்பட்டு அவன் பின்பற்றும் சமூகக் கட்டுப்பாடுகளும்தான். பாலியல் உணர்ச்சிகளுக்கும் அவனது சமூக ரீதியான பொறுப்பு உணர்வுகளுக்கும் இடையேயான முரண்பாடுகளும் அதையொட்டி ஒருவனின் அகநிலையில் ஓயாது நடக்கும் போராட்டங்களையும் எதிர்கொள்ளும் போது ஆனந்த விகடன்களும் குமுதங்களும் எரியும் நெருப்பில் பெட்ரோல் ஊற்றுகின்றன. அந்த முரண்பாட்டை நல்ல விதமாக ஆற்றுப்படுத்துவதற்குப் பதில் வெறியைக் கிளப்பி விட்டு பொதுப்புத்தியில் உறைந்து போயிருக்கும் அசிங்கங்களை மேலும் வளர்த்தெடுக்கின்றன. இறுதியில் பெண்களை வீட்டுச் சிறையில் ஒரு போகப்பொருளாய் அடைத்து வைத்திருப்பதைத்தான் விகடன், குமுதம் அறிவாளிகள் செய்து வருகின்றனர்.

ஆம்பிளைப் பொறுக்கித் தனத்தையே ஹீரோத்தனமாக முன்வைக்கும் சினிமாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதுவது, திரையில் பெண்களை தரக்குறைவாக மதிக்கும் "நாயகர்களை" அழைத்து பேட்டி காண்பது என்று ஆணாதிக்க திமிர்த்தனங்களுக்குப் பரிவட்டம் கட்டி அதையே ஒரு பொதுக் கலாசாரமாக நிலைநிறுத்தியதில் பத்திரிகைகளின் பங்கு முக்கியமானது. பெண்ணைப் போகப் பொருளாக்கி விட்டார்களே, விற்பனைப் பண்டமாக்கி விட்டார்களே என்று பத்தாம் பக்கத்தில் கட்டுரையாளர் உயிரைக் கொடுத்து தொண்டைத் தண்ணீர் வற்றக் "குமுறிக்" கொண்டிருக்கிறார் - நடுப்பக்கத்திலோ கல்யாண் ஜுவல்லர்ஸின் விளம்பரம் கழுத்து நிறைய நகைகளோடு ஒரு பெண் அமர்ந்திருக்க பக்கத்திலேயே, "திருமணம் பற்றிய சிந்தனை.. இனி ராஜகம்பீரமாகும்" என்கிற வாசகங்கள். பெண்ணைப் பெற்றால் வரதட்சிணையாக நகை போட்டுக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதை விளம்பரத்தில் சொல்லி விட்டு முதல் பக்கத்தில் நீர்த்துப் போன மொழியில் கட்டுரையாளரின் உபதேசம். அருவெறுப்பூட்டுகிறது இந்த நாடகம்.

இப்படிப்பட்ட பத்திரிகைகளைப் படித்து "தயாராகும்" ஒரு இளைஞன் எப்படியிருப்பான்? பொறுக்கியாக இல்லையென்றால் தான் ஆச்சரியம். இவ்வாறாகத் "தயாரான" இளைஞன் ஒருவன் சாலையில் செல்லும் பெண்ணை எப்படிப் பார்ப்பான்? அவன் குற்றவாளியென்றால் அவனது ஆண்மைத் திமிர் கொண்ட ஆளுமையின் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கும் இந்தப் பத்திரிகைகள் குற்றவாளிகள் இல்லையா? பெண்களை போகப் பொருட்களாகவும், நுகர்வுப் பண்டங்களாகவும் கடைவிரிக்கும் ஊடகங்கள் வழியே தனக்கென்று ஒரு ஆணாதிக்க ஆளுமையை வளர்த்துக் கொள்ளும் லும்பன்கள் பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபடும் போது தண்டிக்கப் படுகிறார்கள். ஆனால், அந்தக் குற்றத்தைத் தூண்டிய பத்திரிகைகளோ தண்டனையிலிருந்து தப்புவது மட்டுமின்றி நடந்த குற்றச் சம்பவத்தையே எந்தக் கூச்சநாச்சமும் இன்றிக் காசாக்குகின்றன.

பாலியல் குற்றச்சம்பவங்களில் குற்றமிழைத்தவர்களுக்கு தூக்கு, ஆண்மை நீக்கம், ஆயுள் சிறை என்று அவரவர்க்குத் தோன்றிய தண்டனைகளைப் பட்டியலிடுகின்றனர். ஆனால், இந்தக் குற்றங்களின் காரண கர்த்தாக்களுக்கு யார் எந்த தண்டனையை வழங்குவது?



- தமிழரசன் -

# இலங்கையில் அருகிவரும் ஆபிரிக்க கபீர் இன மக்கள்



(கொழும்பு)

ஆசியாவின் அதிசயம் என்று இலங்கை தம்மை சர்வதேச அளவில் பறைசாற்றிக் கொண்டிருக்கும் வேளையில், இலங்கைக்குள்ளேயே சிறுபான்மையினரிலும் சிறுபான்மையாக இருக்கும் ஓர் இனம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரிதாக தெரியாமல் இருப்பது ஒரு அதிசயமே.

காலனிய நாடுகள் ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளை விலைக்கு வாங்கிச் சென்று, தாம் ஆட்சி செய்த பிற நாடுகளில் பணிக்கமர்த்தியது வரலாற்றில் ஒரு கசப்பான உண்மை.

அக்காலகட்டத்தில் சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியிலிருந்து ஒரு தொகுதியினர் இலங்கைக்கும் அடிமைகளாக கொண்டுவரப்பட்டனர். அவர்களின் வம்சமே இந்தக் கபீர்கள்.

இவர்கள் மொசாம்பிக் நாட்டிலிருந்து வந்ததாக தமது முன்னோர் கூறக் கேட்டதாகக் கூறினாலும், அது முற்றிலும் சரியா, அப்படியென்றால் மொசாம்பிக் நாட்டின் எப்பகுதியிலிருந்து வந்தார்கள் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் யாரிடமும் இல்லை.

இலங்கையில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இம்மக்கள் இருக்கிறார்கள்.

வடமேற்கே புத்தளம் மாவட்டத்தின் சிராம்பியடியில் இவர்களில் பெரும்பான்மையானவர்களும் கிழக்கே மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் ஆங்காங்கே சிலரும் வாழ்கிறார்கள்.

இலங்கையின் தேசிய மக்கள் கணக்கெடுப்பு ஆவணங்களில் கூட நாட்டில் மொத்தமாக எவ்வளவு கபீர் மக்கள் இருக்கிறார்கள் என்பதற்கான புள்ளி விபரங்களும் இருப்பதாகத் தெரியவில்லை.

மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது இவர்களும் சிங்கள மக்களாகவே கருதப்பட்டு கணக்கெடுக்கப்பட்டதாகவும் இம்மக்கள் கூறுகிறார்கள்.

# தேசிய கீதத்தில் மாற்றமா? இல்லை என்கிறது அரசு

(கொழும்பு)

தேசியக் கீதத்தில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படமாட்டாது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். தேசிய கீதத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பது தற்போதைய தேவையில்லை எனவும் அதனை மாற்றுவதன் மூலம் ஏற்படப் போகும் பலன் என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவர் எதனைக் கூறினாலும் தேசிய கீதத்தில் எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்பட மாட்டாது. அதனை மாற்றியமைக்கப் போவதுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தேசியக் கீதத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தார். இதனை ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட சிங்கள தேசிய கட்சிகளும், அமைப்புகளும் கடுமையாக எதிர்த்திருந்தநிலையிலேயே அமைச்சர் கெஹலிய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# இலங்கைப் பெண் டுபாயில் மரணம்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவர் டுபாயில் உயிரிழந்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நான்காம் மாடியிலிருந்து பாய்ந்தபோதே இவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனுபாமா (வயது-26) என்ற பெண்ணே இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இவர் டுபாயிலுள்ள ஜென் துப்புரவாக்கல் கம்பனியொன்றில் நான்கு மாதங்களுக்கு முன்னர் தொழில் வாய்ப்புப் பெற்று பணியாற்றிவந்தார்.

# இன முரண்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் குறித்து விசாரணை?

(கொழும்பு)

நாட்டில் இன முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிப்போர் தொடர்பில் விசாரணை நடத்த உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு குழுக்கள் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் நோக்கில் இரண்டு குழுக்கள் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டில் இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் சக்தியொன்றுக்கு வெளிநாட்டிலிருந்து நிதி உதவிகள் கிடைக்கப்பெற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இன முரண்பாடுகள் குறித்து விசாரணை செய்யும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

# இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டால் எவரும் அவுஸ்ரேலியா வரமாட்டார்

## கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு அமைதியான வாழ்க்கை இலங்கையில் ஏற்படும் பட்சத்தில், அகதிகள் எவரும் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்குச் வரப்போவதில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கை வந்துள்ள அவுஸ்ரேலிய எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் சுட்டிக் காட்டியுள்ளதுடன், தீர்வுக்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியாவுக்கு மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் தொடர்பில் பேசுவதற்கு இலங்கைக்கு வந்துள்ள அவுஸ்ரேலிய எதிர்க்கட்சியின் பிரதித் தலைவர் ஜுலி பிஷப் தலைமையிலான குழுவுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இதன்போது இலங்கையின் அரசியல் நிலைமை குறித்தும் பேசப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்ததுடன், இச்சந்திப்பில் அவுஸ்ரேலிய எதிர்க்கட்சியின் பிரதித் தலைவருடன் அந்நாட்டின் லிபரல் கட்சியின் குடிவரவு குடியகல்வு பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் மற்றும் எல்லைப்பாதுகாப்பு பேச்சாளர் மைக்கல் ஹீனனும் பங்குபற்றியதாகத் தெரிவித்தனர்.

மேலும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டு தமிழ் மக்கள் அமைதியான, சுதந்திரமான வாழ்க்கை வாழும் சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்கள் அகதிகளாக அவுஸ்ரேலியாவுக்கு அபாயம்மிக்க கடற்பயணத்தின் மூலம் செல்ல வேண்டி ஏற்படாதெனவும் எனவே அவுஸ்ரேலிய அரசாங்கம் தீர்வுக்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனக் கோரியதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

# தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

நடுத்தர திட்டத்தின் கீழ் தேயிலை ஏற்றுமதியினை 40 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக அதிகரிக்க இலங்கை தேயிலைச் சபை திட்டமிட்டுள்ளதாக அதன் தலைமைப் பொறுப்பிலுள்ள ஜானகி குருப்பு தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பெறுமதி சேர் வரி மற்றும் 210 கோடி அமெரிக்க டொலர்களை தேயிலை ஏற்றுமதி மூலம் பெற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். கடந்த வருடம் தேயிலை ஏற்றுமதி மூலம் 16 ஆயிரம் கோடி ரூபா வருவாயாக பெறப்பட்டுள்ளது. இந்த வருவாய் அதற்கு முன்னைய வருடத்துடன ஒப்பிடுகையில் 9.5 சதவீதமான அதிகரிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபாயின் பெறுமதி குறைந்தமையும் இதற்கான ஒரு காரணமாக கருதப்படுகிறது. இதேவேளை, 2002ஆம் ஆண்டு முதல் தேயிலை ஏற்றுமதி மூலமான வருவாய் படிப்படியாக உயர்ந்து வருவதாகவும் இலங்கை தேயிலைச் சபையின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஜானகிகுருப்பு தெரிவித்துள்ளார்.



அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி கற்கும் பொருளாதார நிலையில் பின்தங்கிய சில மாணவர்களுக்கு யாழ்.எயிட் நிறுவனம் கற்றல் உபகரணங்களை வழங்கியது. இவ் உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரியில் அதிபர் நா.கேதீஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது. தேவைப்பாடு உடைய மாணவர்களுக்கு பாடசாலை பைகள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் என்பன வழங்கப்பட்டன.

# அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்ப பலம் வாய்ந்த கூட்டணி அவசியம்

## என்கிறார் ரணில்

(கொழும்பு)

அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்ப பலம் வாய்ந்த கூட்டணியொன்றும், அரசியல் இராணுவமொன்றும் அடித்தளத்திலிருந்து உருவாக வேண்டும்மென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை கௌரவித்தல் மற்றும் பிரதிநிதிகளுக்கு அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியை முன்கொண்டு செல்வதற்கும் தற் போதைய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கும் கட்சி உறுப்பினர்களின் குரல்கள் முக்கிய உந்துதலாக உள்ளன.

அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவதற்கு வழியைத் தேட வேண்டும். அதனை செயற்படுத்துவதற்கு பலம் வாய்ந்த கூட்டணியொன்றும், அரசியல் இராணுவம் ஒன்றும் அடித்தளத்திலிருந்து உருவாக வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி என பிரதான இரண்டு கட்சிகள் இருக்கின்றன.

இவற்றின் மீதே அனைவரும் கவனத்தை திருப்புகிறார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.



முசலி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் எவ்வித அடிப்படை வசதியும் இன்றி காடுகளுக்குள் தமது குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருவதைக் காணலாம்.

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் மன்னாரில் பல்வேறு பிரச்சினைகள்

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பான மீளாய்வுக்கூட்டத்தில் ஏற்பட்ட கருத்து மோதலினைத்தொடர்ந்து குறித்த கூட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ள நிலையில்,ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் இடம் பெற்று வருகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக இடமாற்றம் செய்யப்படாத நிலையில் உள்ள ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக அவசர மீளாய்வுக்கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை 3.30 மணியளவில் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியான் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 400 ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வந்தது. குறித்த ஆசிரியர்கள் மன்னார் மாவட்டத்திற்குள் உள்ள பாடசாலைகளிலேயே இடமாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் இவ்விடயம் தொடர்பான மீள் பரிசீலனை இடம் பெற்றுக்கொண்டிருந்த போது செயலாளரினால் நியமனம் செய்யப்படாத நிலையில் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளரினால் நியமனம் வழங்கப்பட்ட கோட்டக்கல்வி அதிகாரியாக செயற்படும் ஜெகநாதன் என்பவருக்கும்,மன்னார் வலயக்கல்விப்பணிமனையில் கடமையாற்றும் பெண் அதிகாரி ஒருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

குறித்த மன்னார் கோட்டக்கல்வி அதிகாரி மன்னார் வலயக்கல்விப் பணிமனையில் கடமையாற்றும் பெண் அதிகாரியை பல்வேறு தீய வார்த்தைகளினால் பேசியுள்ளார். இதன் போது மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளரும், சக அதிகாரிகளும் அமைதியாக இருந்துள்ளனர். இதனால் குறித்த இடமாற்றம் தொடர்பான கூட்டம் இரவு 7.30 மணியளவில் இடை நிறுத்தப்பட்டது.

# முசலி கிராமத்திற்கு வீடமைப்புத்திட்டம்



(மன்னார்)

மன்னார்-முசலிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மணற்குளம் கிராமத்திற்கான வீடமைப்பு திட்ட வேலைகள் தற்போது ஆரம்பமாகி துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இலங்கை ஜமாத்தே இஸ்லாமியின் அனுசரணையுடன் குவைத்நாட்டின் நிதியுதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினூடாக இக்கிராமத்தில் வசிக்கும் 50 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக வீட்டுத்திட்டம் வழங்கப்படும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் இக்கிராமத்தில் வசிக்கும் மக்கள் தாம் பெரும் நன்மையடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# கள்ளநோட்டின் புழக்கம் நாச்சிக்குடாவில் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

நாச்சிக்குடாப் பகுதியில் ஆயிரம் ரூபா கள்ள நோட்டு புழக்கங்கள் அதிகரித்துள்ளதாக தொவிக்கப்படுகின்றது.

அண்மையில் கூட நாச்சிக்குடாப் பகுதியில் ஆயிரம் ரூபா கள்ளநோட்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு சிவில் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்ததையடுத்து இக் கள்ளநோட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் இதுபற்றி விசாரணைகளை மேற்கொண்டு வருவதையடுத்து இக் கள்ள நோட்டினை வைத்து கைமாற்றம் செய்து வந்த பத்து பேர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபின், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (09)

# பொலிஸ் அவசர சேவை நிலையம் யாழ். நகரில் திறந்துவைப்பு

யாழ். நகரத்தில் நடைபெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். நகரத்தின் மத்தியில் அமைக்கப்பட்ட பொலிஸ் அவசர சேவை நிலையம் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தியாகி அறக்கொடை நிலையத்தின் அனுசரணையில் நவீன முறையில் அமைக்கப்பட்ட இந்த சேவை நிலையத்தை யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா திறந்துவைத்தார்.

இந்த அவசர சேவை நிலைய திறப்பு விழாவில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி, யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா ஆகியோர் கலந்துகொண்டனர். (25)




# பதிவிறக்கப் பெட்டகம்

சட்டங்களை கடுமையாக்குவதால் இத்தகைய பிரச்சினைகள் தீர்ந்துவிடாது என்பது அனைவரும் அறிந்ததே. இது சமூக பண்பாட்டு நடைமுறைகளின் விளைவாக உருவான ஒன்று. சமூகவயமாகிவிட்ட மனித உடலிற்குள், பாலின்பம் என்பது மையமானதாக கட்டப்பட்டு உள்ளது. [இந்த கட்டமைப்பிற்கும் முதலாளித்துவ வளர்ச்சிக்கும் உள்ள உறவுபற்றி பிரெஞ்சு சிந்தனையாளர் மிஷல் ஃபூக்கோ தனது "பாலியல் வரலாறு" என்கிற நூலில் விரிவாகப் பேசுகிறார்.] அவ்வின்பம் தடைப்படும், அல்லது தடைப்படுத்தப்படும்போது, அது வன்முறையாக வெளிப்பாடு கொள்கிறது. மனித வேட்கைகளை அல்லது மன வக்கிரங்களை சட்டம் சரிபடுத்தாது. அது ஆழமாக வேரோடி, தருணம் பார்த்து வன்முறையாகவும், வக்கிரமாகவும் வெளிப்படும் வண்ணம் மனதில் ஆழ்தளத்திற்கே தள்ளும். அப்படியே சட்டங்கள் போடப்பட்டாலும், அது பாரபட்சமற்று, அரசியலற்று, சமமாகவும் சரியாகவும் நடைமுறைக்கு உட்படுத்தப்படுகிறதா? என்று கண்காணிப்பது அவசியம். மக்கள் சட்டத்தை கண்காணிப்பதற்கு மாறாக, சட்டம் மக்களை கண்காணிப்பதாக உள்ளது என்பதே இன்றைய நிலை. சட்டத்தின்மீதும், நீதியின்மீதும் மக்களுக்கு ஒரு நம்பகத் தன்மையை உருவாக்குவது அவசியம். அப்படி ஒன்றை உருவாக்கமுடியாதது மட்டுமின்றி உருவாக்குவதற்கான அடிப்படைகள் அற்றதாகவே உள்ளது இன்றைய அதிகார முதலாளித்துவ சமூக அமைப்பும் அதன் ஏற்றத்தாழ்வான குடிசார் சிந்தனைமுறைகளும்.

– ஜமாலன்

கேரளாவில் ஈ.கே.நாயனார் முதல்வராயிருந்தபோது, நிதியை கிராமங்களுக்கு ஒதுக்கி அந்தந்த கிராம மக்களே தங்கள் தேவைகளை முடிவுசெய்து நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற திட்டம் கொண்டு வரப்பட்டது. ஒரு கிராமத்தில் ஆண்கள் அனைவரும் கூடிப்பேசி தெருவிளக்குகள் அமைத்தார்கள். அன்றிரவே அந்தக் கிராமத்து பெண்கள் அந்த விளக்குகளை உடைத்தெறிந்தார்கள்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் இரவில் வெளிச்சம் அதிகம் இருந்தால் பெண்களால் தங்களின் இயற்கைத் தேவைகளுக்காக வெளியில் செல்ல முடியாதென்பதால் தான் தெருவிளக்குகளை உடைத்துவிட்டதாக தெரிவித்தார்கள். இதைத் தெரிந்து கொண்ட இ.எம்.எஸ். அந்தக் கிராம சபைக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், 'உங்கள் கிராமத்தில் முதலில் கட்டப்பட வேண்டியது கழிப்பிடம்தான். சபையில் ஆண்கள் மட்டுமே எல்லா முடிவுகளையும் எடுப்பதால் நம்மால் பெண்களின் பிரச்சனைகளை புரிந்துகொள்ள முடியவில்லை. நாம் ஆண்களின் சபையாக சமூகத்தை வைத்திருக்கிறோம். எனவே அடுத்த கூட்டத்தில் இருந்து பெண்களையும் கலந்து பேசுங்கள். அவளால் தான் அவளது தேவைகளைப் பேச முடியும்' என்று எழுதினார்.

– ஆதவன் தீட்சண்யா

உலகத்தில் முளைக்கும் எல்லா சச்சரவுகளுக்கும், பகைக்கும் மூலகாரணம் ஒரு குழுவினர் மற்றொரு குழுவினரைவிடத் தாம் மேம்பட்டவர் என்று நினைப்பதுதான்.

– அமார்த்தியா சென்

ஒரு விஷயம், பாருங்கள், நமது மூதாதையர்களான பல்வேறு முனிவர்கள் உலகம், பிறப்பு முதலியவற்றைப்பற்றி இது இப்படி, இதுவே உண்மை, இதுதான் இறுதியான முடிவு – என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள் அல்லவா? அவற்றை வேதம் என்றாவது சொல்லுங்கள், உபநிடதம் என்றாவது சொல்லுங்கள் – தவத்தினால் அறிந்துகொண்டது என்றோ கடவுளே வந்து காதில் கிசுகிசுத்தது என்றோ சொல்லுங்கள். எனக்கு ஓர் ஐயம், இந்த உலகம், படைப்பு முதலியவற்றைப் பற்றி நான் ஏதோ சிறிது படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறேன். உயிர்க்கூட்டத்தின் இந்த யாத்திரை எங்கோ தொடங்கி எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. பயணம் தொடங்கிய எவ்வளவோ காலத்திற்குப் பிறகு, வழியில் இரயில் நின்ற இடத்தில் வண்டியேறும் பிரயாணியைப்போல மனிதன் என்னும் பிராணி உள்ளே நுழைந்தான். நுழைந்தவன், நுழைந்ததுபோலவே இறங்கியும் விட்டான். வாழ்வு என்னும் பயணம் மட்டும் இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. அதனுடைய குறிக்கோள் இன்றுவரை தெரியவில்லை. இன்னும் கடக்கவேண்டிய வழி எண்ணிப் பார்க்க முடியாத அளவு நீண்டிருக்கிறது. அத்தகைய வேளையில் அவன் எப்படிப்பட்டவனேயாகட்டும், 'நான் இதன் இரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டேன், இதுவே உண்மை' என்று முழங்குவானானால் அது நகைப்பிற்குரியதாகிறதல்லவா? – 'அழிந்தபிறகு' நாவலில் சிவராம காரந்த்

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட விஷேட செயற்றிட்டம்



ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

சென்றவாரத் தொடர்ச்சி...

### இரசாயன இயல்புகளில் ஒற்றுமைகள்

5) இவை குளிர் நீருடன் வீறாகத் தாக்கமுறும். அவ்வாறு தாக்கமுறும் போது இந்த உலோகங்களின் ஐதரொட்சைட்டுக்களும், ஐதரசன் வாயுவும் உண்டாகும். தாக்கவீதம் மேலே இருந்து கீழே வர அதிகரிக்கும்.

6) இம் மூலகங்களின் ஐதரொட்சைட்டுகள் வன்காரங்களாகும். இவற்றின் காபனேற்றுக்களும் நீர் பகுப்பின் காரணமாக காரத் தன்மையைக் காட்டும். காபனேற்றுக்கள் உயர் வெப்ப நிலையிலும் பிரிகை அடையா.

7) இவற்றின் இரு காபனேற்றுக்கள் திண்ம நிலையில் காணப்படுபவை. ஓரளவு உறுதியுடையவை. உலோக இரு காபனேற்றுகள் வெப்பமேற்றப் படும்போது $CO_2$ வை தரும்.

8) இவற்றின் உப்புக்களில் பெரும்பாலானவை நீரில் கரையும்.

9) இவை அலசன்களுடனும் கந்தகத்துடனும் நேரடியான தாக்கங்களில் ஈடுபடும்.

10) இம்மூலகங்களின் நைத்திரேற்றுக்களை வெப்பமேற்றினால் உயர் வெப்பநிலையில் முதலில் உருகி பின்பு பிரிகையுற்று ஒட்சிசனைத் தரும்.

குறிப்பு: இயல்புகளில் படிமுறை மாற்றங்களை மேலே நாம் அவதானித்துள்ளோம். ஆனால் மிகச் சிறிய அணுக்களையுடைய மூலகங்களாகிய நைதரசன், ஐதரசனுடன் ஒப்பிடும்போது இலிதியமே தாக்கவீதம் மிகவும் கூடியது.

### இரண்டாம் தொகுதி மூலகங்களின் பொது இயல்புகள்

#### பௌதிக இயல்புகளின் ஒற்றுமைகள்

1) இவற்றின் அணுக்களினதும் அயன்களினதும் பருமன் - கார உலோகங்களிலும் இவை சிறியவையாகும். மேலே இருந்து கீழே வரும்போது பருமன் அதிகரிக்கும்.

2) அயனாக்கற்சக்தி முதலாம் A கூட்டத்திலும் பார்க்க அதிகமாகவும் மேலே இருந்து கீழே வர குறைவாகவும் இருக்கும்.

3) கார உலோகங்களைப்போல் கல்சியம், துரந்தியம், பேரியம் சுவாலைப் பரிசோதனைகளில் நிறங்களைக் கொடுக்கும்.

4) இவற்றின் மின் நேர்த்தன்மை உயர்ந்தவை. கார உலோகங்கள் மட்டும் இவற்றிலும் உயர்ந்த மின்நேர் தன்மையை உடையவை. இவ் இயல்பும் மேல் இருந்து கீழே வர அதிகரிக்கும்.

5) **மின் எதிர்மை:** இப் பெறுமதிகள் தாழ்ந்தவையாகவும் பெரிலியத்தில் இருந்து Ba வரை குறைவாகவும் இருக்கும்.

6) நிலை : இவை மங்கலான வெண்ணிற உலோகங்கள். கார உலோகங்களிலும் வன்மையும் உருகுநிலையும் அதிகமாகும்.

7) கடத்தல் : மின்னையும் வெப்பத்தையும் கடத்தும்.

8) **இயற்கையில் பரம்பல் :** Be குறைவாகவும், மக்னீசியம் கல்சியம் அதிகமாகவும், Ba குறைவாகவும், Ra மிகக் குறைவாகவும் காணப்படும்.

9) இவற்றின் சேர்வைகளின் நிறங்களும் காந்த இயல்புகளும்**:**அமில மூலகங்களுக்கு நிறமிருந்தாலன்றி இவற்றின் சேர்வைகள் நிறமற்றவையாகும். இலத்திரன் அமைப்பைக் கொண்டு ஒரு உலோக அயனுக்கு நிறம் இருக்குமா என்று கூறலாம். அயனின் இலத்திரன் ஒழுங்கில் சோடியற்றதாக இலத்திரன்கள் காணப்படாமல் மந்த வாயுவின் அமைப்புடன் காணப்பட்டால் அவ்வயன்களுக்கு நிறம் இருக்காது.

10) **நீர் சேர்ந்த உப்புக்கள் :** இவற்றின் உப்புக்கள் கார உலோகச் சேர்வையிலும் பார்க்க அதிக நீர் சேர்ந்த உப்புக்களை உருவாக்கும்.

உதாரணம் : $MgCl_2.6H_2O$, $CaCl_2.6H_2O$, $BaCl_2.6H_2O$

11) **உப்புக்களின் கரைதிறன் :** கார உலோகங்களுடன் ஒப்பிடும்போது இவற்றின் பல சேர்வைகளின் கரைதிறன் பல மடங்கு குறைந்தவையாகும். அத்துடன் கரைதிறன் மேலிருந்து கீழே வரக்குறையும்.

#### சில உப்புக்களின் கரைதிறன்

| | $Cl^-$ | $Br^-$ | $Ac^-$ | $OH^-$ | | ஒட்சலேற்று | குரோமேற்று | ஐதரசன் பொசுபேற்று | $NO_3^-$ | சல்பேற்று | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| $Mg^{++}$ | S | S | S | D.S | கரைதிறன் கூடும் ↓ | S | S | I.S | S | S | கரைதிறன் குறையும் ↓ |
| $Ca^{++}$ | S | S | S | D.S | | I.S | S | I.S | S | I.S | |
| $Sr^{++}$ | S | S | S | D.S | | I.S | S | I.S | S | I.S | |
| $Ba^{++}$ | S | S | S | D.S | | I.S | I.S | I.S | S | I.S | |

S = கரையக்கூடியது
D.S = கஷ்டப்பட்டு கரையும்
I.S = கரையாது

### இரசாயன இயல்புகளின் ஒற்றுமைகள்

1) **வலுவளவும் மின்னேர்தன்மையும் :** இவை ஈர் வலுவளவுள்ளது. கார உலோகங்களுக்கு அடுத்தாற்போல் மின்னேர் தன்மை உடைய மூலகங்களாகும்.

2) தாக்கவீதம் : இவை தாக்கவீதம் கூடிய மூலகங்களாகும்.

இவை வளியில் எரிந்து ஒட்சைட்டுக்களைத் (அயன் சேர்வை) **தருவன** MgO, CaO, SrO, $BaO_2$ பேரியம் வளியில் சுயதகனமடையும், மற்றையவை வளியில் மங்கிவிடும்.

3) ஒட்சைட்டுக்கள் : மூலவியல்பைக் காட்டும், இவ்வியல்பு மேலிருந்து கீழே அதிகரிக்கும்.
குறிப்பு : BeO ஈரியல்புடையது

4) **ஐதரொட்சைட்டுக்கள் :** ஒட்சைட்டுக்களை நீரில் கரைத்து பெற்றுக் கொள்ளலாம். BeO கரைவதில்லை. இவற்றின் கரைதிறன் மேலே இருந்து கீழே வர அதிகரிக்கும்.

5) **ஐதரைட்டுக்கள் :** கார உலோகங்களைப்போல தயாரிக்கலாம் $BeH_2$ நேரடியாக தயாரிக்க முடிவதில்லை.
6) நீருடன் தாக்கம் : ஒருபடி திறனை அவதானிக்கலாம்.
Be கொதிநீருடன் கூடதாக்கம் புரிவதில்லை.
Mg கொதிநீருடன் தாக்கமுறும்
Ca சாதாரண வெப்பநிலையில் நீருடன் பொதுவாக தாக்கமுறும்.
Sr சாதாரண வெப்பநிலையில் நீருடன் விரைவாகத் தாக்கமுறும்.
Ba சாதாரண வெப்பநிலையில் நீருடன் விரைவாகத் தாக்கமுறும்.

7) **அமிலங்களுடன் தாக்கம் :** அமிலங்களில் கரைந்து ஐதரசனை இடம் பெயர்க்கும். பெரிலியம் ஈரியல்புடையது. காரங்களிலும் கரையும். இவ் இயல்பில் அலுமினியத்துடன் மூலைவிட்ட ஒற்றுமையைக் காட்டுகிறது.

8) **நைதரசனுடன் வேர்வது :** கார் உலோகங்களைப் போல் சேர்வைகளின் பொதுச் சூத்திரம் $M_3N_2$.

9) **காபனேற்றுக்கள் :** இவற்றை வெப்பமேற்றும்போது அவை பிரிந்து இவ் உலோகங்களின் ஒட்சைட்டுக்களையும் காபனீரொட்டையும் தரும். மேலே இருந்து கீழே வர இச் சேர்வைகளின் உறுதி நிலை கூடும்.

10) ஏலைட்டுகள் ($MX_2$) இவற்றின் புளோரைட்டுக்களை விட மற்ற எல்லா ஏலைட்டுக்களும் நீரில் கரையும். இவை நீர்மயமாகும். பெரிலியத்தில் ஏலைட்டு பங்கீட்டு வலுச் சேர்வை ஆகும். மற்றையவை அயன் சேர்வைகளாகும்.
11) காபைட்டுகளை ($MC_2$) இவை அயன் காபைட்டுகள் ஆகும். இவற்றில் கல்சியம் காபைட்டு பிரசித்தமானது. இது நீருடன் தாக்கமுற்று அசற்றலீனை தரும்

$$CaC_2 + 2H_2O = Ca(OH)_2 + C_2H_2$$

இதனால் இதனை அசற்றலைட்டு என்றும் அழைப்பர்

#### பெரிலியமும் மக்னீசியமும் மற்றைய காரமண் மூலகங்களுடன் காட்டும் வேறுபாடுகள்

1) உலர்ந்த வளியினாலும் சாதாரண வெப்பநிலையில் நீரினாலும் பாதிக்கப்படுவதில்லை.
2) பெரிலியம், காரங்களிலும் கரையும்.
3) பெரிலியம் மக்னீசியம் சல்பேற்றுகள் நீரில் கரையும்.
4) இவற்றின் காபனேற்றுக்களை அமோனியம் குளோரைட்டின் முன்னிலையில் அமோனியம் காபனேற்று வீழ்படிவாக்குவதில்லை.
5) இவற்றின் உப்புக்கள் சுவாலைப் பரிசோதனையில் நிறங்களைத் தருவதில்லை.

### I ஆம் தொகுதியையும் II ஆம் தொகுதியையும் ஒப்பிடுதல்

**ஒற்றுமைகள் :**

1) இவ்விரு கூட்டத்தைச் சேர்ந்த மூலகங்களும் வெண்மையான மெதுமையான, இலேசான, உலோகங்கள் ஆகும்.

2) இவ்விரு கூட்ட மூலகங்களும் தாக்கவீதம் கூடியவை. வளியுடனும், நீருடனும் தாக்கம் புரிபவை.

3) இவ்விரு கூட்டத்து ஒட்சைட்டுகளும் நீரில் வெப்ப வெளியீட்டுடன் கரைந்து காரக் கரைசல்களைத் தரும். இக்கரைசல்களில் காபனீரொட்சைட்டு கரையும்.

4) கல்சியம், துரந்தியம், பேரியம் ஆகியவை 1 ஆம் கூட்டத்து மூலகங்களைப் போல் சுவாலைப் பரிசோதனைகளுக்கு நிறத்தைக் கொடுக்கின்றன.

5) இவ்விரு கூட்ட மூலகங்களும் அவற்றின் சேர்வைகளில் இருந்து மின்பகுப்பு முறைகளால் பிரித்தெடுக்கப்படுகிறது.

**வேற்றுமைகள் :**

1) காபனேற்றுகள் : இலிதியத்தை தவிர்ந்த கார உலோகங்களின் காபனேற்றுகள் நீரில் நன்றாகக் கரையும். இவற்றின் கரைசல்கள் காரக் கரைசல்கள் ஆகும். ஆனால் காரமண் உலோகங்களின் காபனேற்றுகள் நீரில் அரிதாகவே கரையும். மேலும் இக்காபனேற்றுக்கள் கார உலோகங்களின் காபனேற்றுக்கள் போல் அல்லாது வெப்பமேற்றும்போது இவற்றின் ஒட்சைட்டுகளையும், காபனீரொட்சைட்டையும் தந்து பிரியும்.

2) சோடியம் பொற்றாசியத்தின் இரு காபனேற்றுகள் அவற்றின் காபனேற்றுக்களிலும் பார்க்க குறைவாகவே கரையும். ஆனால் கல்சியம், மக்னீசியம் ஆகியவற்றின் இரு காபனேற்றுக்கள் அவற்றின் காபனேற்றுகளிலும் கரைதிறன் கூடியவை.

3) கார உலோகங்களின் சல்பேற்றுகள், பொசுபேற்றுகள், ஒட்சலேற்றுகள் ஆகியவை நீரில் கரையக்கூடியவை. ஆனால் கார மண் உலோகங்களின் இச் சேர்வைகள் நீரில் கரையாது.

4) கார உலோகங்களின் நைத்திரேற்றுக்கள் வெப்பமாக்கப்படும்போது நைத்திரேற்றுக்களையும் ஒட்சிசனையும் தரும். காரமண் உலோகங்களின் நைத்திரேற்றுக்கள் சூடாக்கும்போது உலோகங்களின் ஒட்சைட்டுக்களையும், நைதரசன் ஈரொட்சைட்டையும், ஒட்சிசனையும் தரும்.

## P தொகுப்பு மூலகங்கள்

பெயருக்கான காரணமும் இலத்திரன் நிலையமைப்பும்

தொகுதிகள்

| III A | IV A | V A | VI A | VII A | VIII A | |
|---|---|---|---|---|---|---|
| $ns^2\ np^1$ | $ns^2\ np^2$ | $ns^2\ np^3$ | $ns^2\ np^4$ | $ns^2\ np^5$ | $ns^2\ np^6$ | இறுதிச் சத்தி மட்ட இலத்திரன் மைப்பு |
| | | | | | He | 1 ஆம் ஆவர்த்தனம் |
| B | C | N | O | F | Ne | 2 ஆம் ஆவர்த்தனம் |
| Al | Si | P | S | Cl | Ar | 3 ஆம் ஆவர்த்தனம் |
| Ga | Gc | As | Se | Br | Kr | 4 ஆம் ஆவர்த்தனம் |
| In | Sn | Sb | Te | I | Xe | 5 ஆம் ஆவர்த்தனம் |
| Tl | Pb | Bi | Po | At | Rn | 6 ஆம் ஆவர்த்தனம் |

மேலே தரப்பட்ட அட்டவணை ஆவர்த்தன அட்டவணை P தொகுப்பு மூலகங்களைக் கொண்டுள்ள பகுதியாகும். மேலே தொகுதி எண்ணிக்கையும் அதன் கீழ் இறுதி சக்தி மட்டத்தின் இலத்திரன் நிலையமைப்பும் தரப்பட்டிருக்கின்றன. இங்கே n என்பது நாம் எடுத்துக் கொள்ளும் மூலகம் காணப்படும் ஆவர்த்தனத்தின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

2 ஆம் ஆவர்த்தனத்தில் காணப்படும் மூலகங்களின் இலத்திரன் நிலை அமைப்பை அவதானிப்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அணு எண் | 5 | போரன் | (B) | : (He) $2s^2, 2p^1$ |
| அணு எண் | 6 | காபன் | (C) | : (He) $2s^2, 2p^2$ |
| அணு எண் | 7 | நைதரசன் | (N) | : (He) $2s^2, 2p^3$ |
| அணு எண் | 8 | ஒட்சிசன் | (O) | : (He) $2s^2, 2p^4$ |
| அணு எண் | 9 | புளோறின் | (F) | : (He) $2s^2, 2p^5$ |
| அணு எண் | 10 | நேயன் | (Ne) | : (He) $2s^2, 2p^6$ |

இங்கே நாம் காணக்கூடியது, ஆவர்த்தனத்தின் வழியே போரன் தொடக்கம் நேயன்வரை, இறுதிப் P சக்தி மட்டத்தில் ஒவ்வொரு இலத்திரன் கூடுதலாக நிரம்பி வருவதாகும். மேலும் ஈற்றுச் சத்திப்படியில் உள்ள, இலத்திரன்களின் மொத்த எண்ணிக்கை கூட்டத்தின் எண்ணிக்கையைத் தரும். இம் மூலகங்களில் இறுதி உபசத்திப்படி P உபசத்திப்படியாகும். இதில் இலத்திரன்கள் நிரம்புவதனால் இவற்றை P தொகுப்பு மூலகங்கள் என்போம். இவற்றுள் மூன்றாம் தொகுதி மூலகங்கள் பற்றி முதலில் ஆராய்வோம்.

### மூன்றாம் தொகுதி மூலகங்கள்

**பொதுக் குறிப்புகள்**

இத்தொகுதி மூலகங்கள் இறுதிச் சத்திப்படியில் மூன்று இலத்திரன்களைக் கொண்டிருக்கும். போரன், அலுமினியம், கல்லியம், இந்தியம், தல்லியம் ஆகியவை இக் கூட்டத்தில் அடங்கும். இவற்றில் போரனும் அலுமினியமும் பெருமளவில் காணப்படும் மூலகங்கள் ஆகும். மற்றவை அரிதிற் கிடைப்பவையாகும். இவற்றில் போரன் அலோகமாகும். மற்றவை உலோகங்கள் ஆகும். முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களைப் போல் அல்லாது இத் தொகுதியில் படிமுறையான இயல்பு மாற்றங்கள் முற்றாக அவதானிக்கப்படுவதில்லை. அணு எண் அதிகரிக்க எதிர்பார்த்தது போல் அடர்த்தி, அணு ஆரை, அயன் ஆரை ஆகியவை அதிகரிக்கின்றன. உருகு நிலைகள் ஒழுங்கற்றுக் காணப்படுகின்றன.

அட்டவணை

| குறியீடு | Z | இலத்திரன் நிலையமைப்பு | உருகு நிலை °C | கொதி நிலை °C | அயனாக்கன்சக்தி °C | ஒட்சியேற்ற நிலைகள் |
|---|---|---|---|---|---|---|
| B | 5 | [He] $2S^2, 2p^1$ | 2300 | 2550 | 8·30 | 3 |
| Al | 13 | [Ne] $3S^2, 3p^1$ | 659·7 | 2300 | 5·98 | 3 |
| Ga | 31 | [Ar] $3d^{10}, 4S^2, 4p^1$ | 29·8 | 2000 | 6·00 | 1,3 |
| In | 49 | [Kr] $4d^{10}, 5S^2, 5p^1$ | 155 | 1450 | 5·79 | 1,3 |
| Tl | 81 | [Xe] $4f^{14}, 5d^{10}, 6s^2, 6p^1$ | 304 | 1560 | 6·11 | 1,3 |

இம் மூலகங்கள் எல்லாவற்றிலும் $ns^2\ np^1$ என்ற ஈற்றுச் சத்திப்படி உண்டு என்பதனால் பல இயல்புகளில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அதேசமயம் ஈற்றயல் ஒழுக்கில் 2 இலத்திரன்கள் ($1s^2$) போரனில் உண்டு. 8 இலத்திரன்கள் அலுமினியத்தில் உண்டு. இவைசடத்துவ வாயுக்களின் அமைப்பாகும். ஆனால் அடுத்த மூன்று மூலகங்களிலும் 18 இலத்திரன்கள் உண்டு. ஆகவே இவை மூன்றும் போரன் அலுமினியம் ஆகியவற்றிலும் பல இயல்புகளில் வேறுபடுகின்றன. அதே சமயம் போரனும் பல இயல்புகளில் அலுமினியத்தில் இருந்து வேறுபடுகிறது.

**ஒட்சியேற்ற நிலைகள்**


இத்தொகுதி மூலகங்கள் பிரதான ஒட்சியேற்ற நிலை +3 ஆகும். ஆனால் போரன் எச்சந்தர்ப்பத்திலும் $B^{3+}$ அயன்களைத் தருவதில்லை. போரன் +3 பங்கீட்டு வலுச் சேர்வைகளை உருவாக்கும். மற்ற மூலகங்கள் +3 அயன்களைத் தரும். நீர்க் கரைசல்களில் இவை நீருடன் சிக்கல் அயன்களாகக் காணப்படும்.

உதாரணம் : $AlCl_3$ இல் Al இன் ஒட்சியேற்ற எண் +3
இது சிக்கல் அயனாகவும் $[Al(H_2O)_6]^{3+}$ காணப்படும்.

III ஆம் தொகுதி மூலகங்களின் வெளி இலத்திரன் நிலையமைப்பு $ns^2\ np^1$ ஆகவிருப்பதால் ஒரு P இலத்திரன் மட்டும் அகற்றப்பட்டு +1 ஒட்சியேற்ற நிலை உண்டாகலாம். S இலத்திரன்களை அகற்ற அதிக சக்தி தேவை என்பதால் இந்நிலை உருவாகலாம். ஆனால் போரனில் +1 ஒட்சியேற்ற நிலை அவதானிக்கப்படுவதில்லை. அலுமினியம் தொடக்கம் தல்லியம் வரை இத்தகைய சேர்வைகளின் உறுதிப்பாடு அதிகரிக்கிறது.

### Co - Ordination Number - இணைப்பு எண்


போரனுக்கு இயல்பாக அமைந்த பங்கீட்டு வலுவளவு 3 ஆகும். ஆனால் பிறமூலக் கூறுகளில் இருந்து ஒரு சோடி இலத்திரன்களைப் பெற்று பங்கீட்டு வலுவளவு 4 ஆக ஆக்கிக்கொள்ளலாம். $NH_3 \rightarrow BCl_3$ என்ற சேர்வையில் நைதரசனில் உள்ள தனிச்சோடி இலத்திரன்களை ஈதல் பிணைப்பினால் பெற்றுக்கொள்ளும்.



அலுமினியத்திற்கும் இவ்வியல்பு உண்டு

உதாரணம் 1
அலுமினியம் குளோரைட்டு பல்பகுதியமாகக் காணப்படுகிறது.

(பல்பகுதியம் : பல மூலக்கூறுகள் இணைந்து உண்டாகும் மூலக்கூறு)



குளோறினில் உள்ள தனிச்சோடி இலத்திரன்களை ஈதல் பிணைப்பில் ஈடுபடுத்தி $Al_2Cl_6$ என்னும் இரு பகுதியங்களாகக் காணப்படுகிறது.

உதாரணம் II

($H_3N \rightarrow AlCl_3$) என்ற கூட்டற சேர்வையும் இவ்வாறு உண்டாகிறது ஆனால் அலுமினியத்தில் நிரம்பாத d உபசக்தி மட்டம் இருப்பதால் 6 இணையீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

உதாரணம் III: $[Al(6H_2O)]^{3+} (Cl^{-1})_3$

### போரன்

இத்தொகுதியில் போரனும் அலுமினியம் ஆகிய மூலகங்களைப் பற்றி மட்டும் சிறிதளவு அறிந்து கொள்வோம்.

இருக்கையும் தயாரிப்பும் இயல்புகளும் :
கொலிமனைற்று $Ca_2B_6O1\ 1, 5H_2O$
வெண்காரம் (போரக்ஸ்) $Na_2B_4\ O_7, 10H_2O$

ஆகிய கனிப்பொருட்களாகக் கிடைக்கின்றன. $B_2O_3$, $BCl_3$ என்ற சேர்வைகளாக இவை மாற்றப்பட்டு தாழ்த்துவதால் போரன் பெற்றுக் கொள்ளப்படுகிறது. போரன் இருவகையான புறதிருப்பங்களாகக் காணப்படுகின்றன. (1) பளிங்குரு போரன் (2) பளிங்குரு வற்ற போரன் (அமோபஸ் போரன்). பளிங்குரு போரன் வன்மையானதும் நொருங்கும் தனமை உடையதுமான கரிய மூலகமாகும். மங்கிய உலோக பளபளப்பு காணப்பட்டாலும், இது மின்னின் அரிதிற் கடத்தி. அலோகமாக கொள்ளப்படும்.

சாதாரண வெப்பநிலையில் வலுவான ஒட்சியேற்றும் கருவிகளால் அன்றி வேறு எதனாலும் போரனை தாக்கத்தில் ஈடுபடுத்த முடியாது. புளோரின், செறிந்த நைத்திரிக்கமிலம் ஆகியவையே போரனுடன் தாக்கமுறும். போரனை கார ஒட்சியேற்றும் கலவை (உ-ம் NaOH $NaNO_3$) உடன் உருக்கினால் போரேற்றுகள் என்னும் உப்புக்கள் உண்டாகும்.

$2B + 6OH \rightarrow 2BO_3 3 + 3H_2\uparrow$

போரனை உலோகங்களுடன் உருக்கி உலோக போரைட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம். உ-ம் $Mg_3B_2$

#### போரன் ஐதரைட்டுகள்

மக்னீசியம் போரைட்டு அமிலங்களுடன் தாக்கமுறும் போது பல போரன் ஐதரைட்டுகள் உண்டாகும்.

போரன் ஐதரைட்டுகள் ஒரு தொடரான சேர்வைகள் ஆகும். இத்தொடரில் போரேன் ($BH_3$) என்பது முதற் சேர்வையானாலும் அது தயாரிக்கப்படவில்லை. இரு போரேன் ($B_2H_6$) என்பது ஒரு எளிய போரன் ஐதரைட்டு ஆகும். இது மக்னீசியம் போரைட்டு நீருடன் தாக்கமுறும்போது உண்டாவதில்லை. இது போரன் முக்குளோரைட்டின் ஈதர் கரைசலுக்குள் இலிதியம் அலுமினியம் ஐதரைட்டு என்னும் சேர்வையை சேர்த்து தாழ்த்துவதால் உண்டாகிறது.

$4\ BCl_3 + 3Li\ AlH_4 \rightarrow 2B_2H_6 + 3LiCl + 3AlCl_3$

அலோக ஐதரைட்டுக்களைத் தயாரிக்க இது ஒரு பொதுவான முறையாகும். இருபோரேன் என்பது ஒரு எரியும் தகவுள்ள வாயுவாகும். அது நீருடன் உடனடியாகத் தாக்கமுறும்.

$B_2H_6 + 6H_2O \rightarrow 2H_3BO_3 + 6H_2$

ஒட்சிசன் அற்ற சூழலில் வெப்பமேற்றப்பட்டால் இருபோரேன் போரனாகவும் ஐதரசனாகவும் பிரியும். போரனின் ஐதரைட்டுகள் உறுதியற்றவை.

#### போரனின் ஒட்சைட்டுகள்

போரனின் முக்கிய ஒட்சைட்டு போரன் மூவொட்சைட்டு ஆகும். இதை போரிக்கமிலத்தை வெப்பமேற்றி பெற்றுக் கொள்ளலாம்

$2\ H_3BO \rightarrow B_2O_3 + 3H_2O$

அல்லது போரனை ஒட்சிசனில் எரித்து பெற்றுக்கொள்ளலாம்.

$4B + 30_2 = 2B_2O_3$

ஆகவே போரன் மூவொட்சைட்டு ஒரு அமில ஒட்சைட்டு ஆகும். இது போரிக்கமிலத்தின் நீரிலியாகும். இது மூல ஒட்சைட்டுகளுடன் தாக்கமுற்று போரேற்றுகள் உண்டாகும். சில போரேற்றுக்கள் அவற்றுக்கான சிறப்பு நிறங்களைப் பெற்றிருப்பதால் இவை சில மூலகங்களை இனம்காண உதவுகின்றன.

போரன் எலைட்டுகள் : உலோகங்களின் எலைட்டுக்களைப் போன்று அயன் சேர்வைகள் அல்ல. இச்சேர்வைகள் இலத்திரன் பற்றாக்குறை சேர்வைகள் ஆகும்.

### அலுமினியம்

இது புவிமேல் ஓட்டில் 8% ஆகும். களிமண் அலுமினோசிலிக்கேற்றாகும். இதன் முக்கியமான ஒரு இயற்கைப் படிவு போட்சைற்று $Al_2O_3 . 2H_2O$ ஆகும். அலுமினியம் மின்பகுப்பு முறையால் பெறப்படுகிறது. இது வெள்ளி போன்று பளபளப்பானது.

அலுமினியம் நீருடன் தாக்கமுறுவது புலனாவதில்லை. அலுமினியம் அமிலங்களில் இருந்தும் மூலகங்களில் இருந்தும் ஐதரசனை விடுவிக்கும்.

உதாரணம் : $2Al + 6HCl \rightarrow 2AlCl_3 + 3H_2\uparrow$

$2Al + 6H^+ \rightarrow 2Al^3 + 3H_2$ (அமிலம்)
(s) (g)

$2Al + 2OH^- + 6H_2O \rightarrow 2Al(OH)_4^- + 3H_2\uparrow$ (காரம்)
(s) (g)

உ-ம் $2\ Al + 2NaOH + 6H_2O \rightarrow 2NaAl\ (OH)_4 + 3H_2\uparrow$

நைத்திரிக் கமிலம் அலுமினியத்தை தாக்கப்படாதது ஆக்குகின்றது. ஏனெனில் அதன் மேற்பரப்பில் ஒட்சைட்டுப் படலம் உண்டாகி காப்புப் படையாக அமைவதால் ஆகும்.

அலுமினியம் ஒட்சிசனிடத்தில் அதிக நாட்டமுடையது. அலுமினியம் ஒட்சிசனில் எரிக்கப்பட்டால் அதிக வெப்பம் உண்டாகும்.

$2Al + 3/2O2 \rightarrow Al2O3 + 399$ கிலோ கலோரி
(g) (s)

இவ்வியல்பு வேறு ஒட்சைட்டுகளை தாழ்த்த உதவுகின்றது.

$$\underset{(s)}{2Al} + \underset{(s)}{Fe_2O_3} \longrightarrow \underset{(s)}{2Fe} + \underset{(s)}{Al_2O_3} + 203\ K \cdot C$$

இவ்விதமான தாழ்தல் தாக்கம் தேமிற்று தாக்கம் எனப்படும்.

அலுமினியம் ஒட்சைட்டு $Al_2O_3$ (அலுமினா)

இது ஒரு அயன் சேர்வையாகும். $(Al^{3+})_2\ (O^{2-})_3$ அலுமினியம். ஒட்சைட்டும் ஐதான அமிலங்களிலும் செறிந்த காரங்களிலும் கரைந்து உப்புக்களைத் தரும். ஆகவே அலுமினியம் ஒட்சைட்டு ஈரியல்பு உள்ள ஒட்சைட்டாகும்.

$$(Al^{3+})_2(O^{2-})_3 + \underset{(அமிலம்)}{6H^+} \longrightarrow 2Al^{3+} + 3H_2O$$

அலுமினியம் ஐதரொட்சைட்டு அலுமினியம் அயன்கள் உள்ள கரைசல்களுக்குள் சேர்க்கப்பட்டால் ஒரு ஊண்பசை போன்ற வெண்நிற வீழ்படிவு உண்டாகின்றது. இது அலுமினியம் ஐதரொட்சைட்டு ஆகும்.

$$Al_2(SO_4)_3 + 6NH_4OH \longrightarrow 2Al(OH)_3\downarrow + 3(NH_4)_2SO_4$$
$$2Al^{3+} + 3OH^- \longrightarrow 2Al(OH)_3\downarrow$$

(தொடரும்...)

# இலங்கை மீனவர்களுடன் பேச தமிழகம் ஒத்துழைக்க வேண்டும்

## மத்திய அமைச்சர் நாராயணசாமி வேண்டுகோள்



இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க இரு நாட்டு மீனவ அமைப்புகளின் அதிகார பூர்வ பேச்சுவார்த்தைக்கு இந்திய மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு தமிழக அரசு ஒத்துழைக்க வேண்டும் என இந்திய பிரதமர் அலுவலக விவகாரங்களுக்கான இணையமைச்சர் வி.நாராயணசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்,

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி வரும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்திய, இலங்கை மீனவர்கள் எந்தப் பகுதிகளில் மீன்பிடிக்கலாம் என்பது குறித்து எல்லையை நிர்ணயம் செய்ய இரு நாட்டு மீனவ அமைப்புகளும் அதிகார பூர்வமாக சந்தித்துப் பேச மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னரும் இரு நாட்டு மீனவ அமைப்பினர் ஒரு சில முறை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ஆனால், அது அதிகாரபூர்வமற்ற முறையில் நடைபெற்றது. தற்போது இரு நாட்டு மீனவ அமைப்புகளின் பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பாக கடந்த சில தினங்களுக்கு முன்பு புதுடில்லிக்கு விஜயம் செய்த இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் பேசியுள்ளார்.

தமிழக அரசின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே இரு நாட்டு மீனவ அமைப்புகளின் பேச்சுவார்த்தையை நடத்தி ஒப்பந்தம் செய்ய முடியும். தமிழக அரசின் அனுமதி இருந்தால்தான் தமிழக மீனவ அமைப்புகள், இலங்கை மீனவ அமைப்புகளோடு பேச முடியும். இது தொடர்பாக தமிழக தலைமைச் செயலாளருக்கு இந்திய மத்திய வெளிவிவகார செயலாளர் கடிதம் எழுதியுள்ளார் என்று கூறியுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# ‘விஸ்வரூபம்’ மீதானதடை; இன்று வெளிவரும் தீர்ப்பு

### — அரசுடன் பேச கமலுக்கு ஆலோசனை —

(சென்னை)

விஸ்வரூபம் படம் மீதான தடை நீங்குமா நீங்காதா என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருந்து வரும் நிலையில், தீர்ப்பை இன்றைய தினம் ஒத்திவைத்துள்ளது சென்னை உயர்நீதிமன்றம். மேலும் சட்டம் ஒழுங்கைக் கருத்தில் கொண்டும், தேச ஒற்றுமை கருதியும், பெரும் பொருட் செலவில் படத்தைத் தயாரித்துள்ளதால் நஷ்டப்பட்டு விடக் கூடாது என்பதாலும், பிரச்சினை குறித்து அரசுடன் பேசுமாறும் நடிகர் கமல்ஹாசனுக்கு உயர்நீதிமன்றம் அறிவுரை கூறியுள்ளது.

விஸ்வரூபம் படத்திற்கு இஸ்லாமிய அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து தமிழக அரசு இப்படத்தை 2 வாரங்களுக்குத் திரையிடத் தடை விதித்து விட்டது. புதுவையிலும் தடை செய்யப்பட்டது. இந்தத் தடையை எதிர்த்து நடிகர் கமல்ஹாசன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி வெங்கட்ராமன் ஜனவரி 26ஆம் திகதி படத்தைப் பார்ப்பதாகவும், 28ஆம் திகதி வரை படத்திற்குத் தடை நீடிக்கும் என்றும் அறிவித்தார். சர்ச்சைக்குரிய விஸ்வரூபம் படத்தை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வெங்கடராமன் உள்ளிட்ட 50 பேர் பிரசாத் லேபில் பார்வையிட்டனர்.

இதுதொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. நேற்றே தீர்ப்பளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இருப்பினும் தீர்ப்பை இன்றுவரை ஒத்திவைப்பதாக நீதிபதி வெங்கட்ராமன் அறிவித்தார். நீதிபதி தனது உத்தரவின் போது கமல்ஹாசன் தரப்பு வக்கீல்களைப் பார்த்துக் கூறுகையில், நாட்டின் ஒற்றுமையைக் கருத்தில் கொள்ள வேண்டும். கமல்ஹாசன் சுமுக முடிவை பேச்சுவார்த்தை மூலம் மேற்கொள்ள முன்வர வேண்டும். அரசுத் தரப்புடன் சுமுகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

# 1500 கி.மீ. நீரில் சென்றுதாக்கும் அணு ஏவுகணை சோதனை வெற்றி

நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்பட்டு, நீரில் பாய்ந்து எதிரிகளின் கப்பலை தாக்கி அழிக்க வல்ல சக்தி வாய்ந்த பாலிஸ்டிக் கே - 5 ரக அணு ஏவுகணையை வங்களா விரிகுடாவில் இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

10 மீற்றர் நீளம் கொண்ட இந்த ஏவுகணை 1500 கி.மீ



தூரம் வரை பாய்ந்து சென்று குறிப்பிடப்பட்டிருந்த இலக்கினை வெற்றிகரமாக தாக்கி அழிக்ககூடிய வல்லமை பெற்றது.

இவ்வகை ஏவுகணைகள் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா போன்ற 4 நாடுகளிடம் மட்டுமே முன்னர் இருந்தன. இந்த வரிசையில் 5ஆவது இடத்தை தற்போது இந்தியா பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று நீருக்கடியில் 750 கி.மீ தூரம் வரை சென்று தாக்கக்கூடிய கே - 15 ரக ஏவுகணையையும், 290 கி.மீ தூரம் வரை சென்ற தாக்கக் கூடிய பிரம்மோஸ் என்னும் ஏவுகணையையும் வெற்றிகரமாக பரிசோதனை செய்ய இந்தியா முயற்சித்துவருவது குறிப்பிடத்தக்கது.



# கார்கில் போரில் ஈடுபட்டது பாகிஸ்தானிய இராணுவமே!

### — முன்னாள் உளவு அதிகாரி தகவல் —

கார்கில் போரில் தீவிரவாதிகள்தான் ஈடுபட்டதாகவும், இராணுவம் போர் தொடுக்கவில்லை என்றும் இதுவரை பாகிஸ்தான் இராணுவம் கூறி வந்தது. இந்த நிலையில், அந்நாட்டு இராணுவ ஜெனரல் ஒருவரே தற்போது உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார்.

கார்கில் போர் இந்தியா மீது 1999ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட போது, பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்ஐ.யின் தலைவராக இருந்து ஓய்வுபெற்றவர் லெப்டினன்ட் ஜெனரல் ஷாகித் ஆசிஸ். 2005ஆம் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அவர் எழுதியுள்ள கட்டுரையில், கார்கில் போரில் பாகிஸ்தான் இராணுவ வீரர்களே பங்கேற்றதாகவும், அவர்கள் இராணுவ உடைகளை அணியாமல், ஆயுதங்களை ஏந்திச் சென்றதாகவும் கூறியுள்ளார்.

மேலும் கார்கில் பற்றிய முழு உண்மையானது இன்னும் வெளிவரவில்லை என்றும், அந்தப் போரில் சிரமப்பட்டு உயிரிழந்த இராணுவ வீரர்கள் மறக்கடிக்கப்பட்டுள்ளதாகவும், எவ்வித காரணமுமின்றி அவர்கள் ரத்தம் சிந்தியதாகவும் ஷாகித் ஆசிஸ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப், அனைத்து விடயங்களையும் மூடி மறைத்ததாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

---

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY

### POST OF CHIEF SECURITY OFFICER, GRADE II

Applications are invited by me up to 26.02.2013 from suitably qualified persons for the post of Chief Security Officer, Grade II.

## QUALIFICATIONS:

1.An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

OR

2.A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

OR

3.A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

*AGE:* Not more than 45 years.

**Salary Scale:** U-EX 1(II) 2006 *A* 26,020-3X585-27,775(EB) 28,420: 6X645; 6X585-35,800/-p.m.

**Selection :** By Structured Interview

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments FNon -Academic] of this University on a payment of Rs. 100/-for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs. 5/- Stamped envelope of 23X10 c.m in size.

The envelope containing duly filled application form must bear "Post of Chief Security Officer" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 26.02.2013.

## STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed -through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**23.01.2013.**

(C/2415)

---

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இரவு விடுதியில் பற்றிய தீயினால் பிரேசிலில் 245பேர் கருகி மரணம்



பிரேசிலில் இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 245 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

பிரேசில் நாட்டின் சான்டா மரியா நகரில் உள்ள இரவு விடுதியில் கேளிக்கை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன.

இதன் ஒரு பகுதியாக வான வேடிக்கை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் எதிர்பாராத விதமாக தீச்சிதறல்கள் கேளிக்கை விடுதியின் கூரை மீது விழுந்தன. இதனையடுத்து பெரும் விபத்து ஏற்பட்டது.

இந்த விடுதியில் 2 ஆயிரம் பேர் கூடியிருக்கும் வசதி உள்ளது. சம்பவத்தின்போது சுமார் 500 பேர் வரை இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.


விபத்து ஏற்பட்டவுடன வெளியான அதிகளவு புகையால் ஏற்பட்ட மூச்சுத் திணறலாலும், தப்பிக்க முயன்றபோது ஏற்பட்ட நெரிசலில் சிக்கியதாலும் தான் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரித்தது.

இறந்தவர்களில் 189 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் பலரது உடல்கள் விடுதியில் இருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த 100இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

# சீன இராணுவம் தயாரித்த மிகப்பெரிய சரக்கு விமானம்

## பரீட்சார்த்த பறப்பு வெற்றி



(பெய்ஜிங்)

அமெரிக்கா, ரஷ்யாவைத் தொடர்ந்து சீன இராணுவம் தயாரித்த மிகப்பெரிய சரக்கு விமான சோதனை ஓட்டம் வெற்றி பெற்றது.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகளின் இராணுவம் மட்டுமே மிகப்பெரிய சரக்கு விமானங்களை வைத்துள்ளன. அதில் அதிக எடையுள்ள இராணுவ டாங்கிகள் மற்றும் உபகரணங்களை எடுத்துச் செல்ல முடியும். தற்போது இதுபோன்ற சக்தி உடைய விமானத்தை சீன இராணுவமும் தயாரித்துள்ளது.

அதற்கு வை-20 என பெயரிடப்பட்டுள்ளது. இவை 66 தொன் எடையுடன் 13 ஆயிரம் மீற்றர் உயரத்தில் பறக்கக் கூடிய திறன் படைத்தது. இந்த விமானத்துக்குரிய இயந்திரம் ரஷ்யாவின் நவீன தொழில் நுட்பத்துடனும், உதிரிப் பாகங்கள் சீன தொழில் நுட்பத்துடனும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தின் சோதனை ஓட்டம் சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஹான்ஸி மாகாணத்தின் யங்லியாசா விமான நிலையத்தில் நடந்தது. இச்சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்ததாக சீன இராணுவம் அறிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

# எகிப்தில் கலவரம் உச்சம்; அவசர நிலை பிரகடனம்



எகிப்தில் போராட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து 30 நாட்களுக்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

எகிப்தில் கடந்தாண்டு பெப்ரவரி மாதம் நடந்த கால்பந்தாட்ட விளையாட்டின் போது கலவரம் மூண்டது. இதில் 74 பேர் பலியாகினர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை போர்ட் செயித் நீதிமன்றத்தில் நடந்தது. இந்த தீர்ப்பில் 21 வீரர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 4 நாட்களாக தலைநகர் கெய்ரோ உட்பட பல்வேறு நகரங்களில் நடந்த கலவரத்தில் 35 பேர் பலியாகினர்.

இதனையடுத்து போர்ட் செயித், சூயெஸ் மற்றும் இஸ்மாலியா நகரங்களில் அவசர நிலைப்பிரகடனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு வரும்படி போராட்டக்காரர்களுக்கு எகிப்து அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கிடையே அரசுக்கோ, போராட்டக்காரர்களுக்கோ ஆதரவளிக்கப் போவதில்லை என்றும், எகிப்து மக்களுக்கு விசுவாசமாக இருப்போம் என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது.

# வடகொரியாவில் பெற்றோரே குழந்தைகளை உண்ணும் கொடூரம்

## தலைவிரித்தாடுகிறது பஞ்சம்

(பாரியா)

வட கொரியாவில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாரியா மாநிலத்தில் பசிக் கொடுமை தாங்க முடியாமல் பெற்றோரே குழந்தைகளை சாப்பிட்ட சம்பவம் நடந்துள்ளது. வட கொரியாவில் உள்ள பாரியா மாநிலத்தில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

இது தவிர வடக்கும் மற்றும் தெற்கு ஹ்வாங்ஹே மாகாணங்களிலும் மக்கள் பஞ்சத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். அங்கு பசிக் கொடுமை தாங்க முடியாமல் இதுவரை 10,000 பேர் பலியாகியுள்ளனர் என்று கூறப்படுகிறது. மேலும் அப்பகுதியில் பசியைப் போக்க உணவு இல்லாததால் மனிதர்கள் சக மனிதர்களை கொன்று தின்னும் அவலம் அதிகரித்துள்ளது.

இப்படி மக்கள் உணவில்லாமல் இறந்து கொண்டிருக்கையில் வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன்(வயது-30) இரண்டு ஏவுகணைகளை விண்ணில் செலுத்த பெரும் தொகையை செலவு செய்துள்ளார். ஒரு பத்திரிகையாளர் கூறுகையில், ஒரு மனிதர் பசியால் புதைக்கப்பட்ட தனது பேரக்குழந்தையின் உடலைத் தோண்டி எடுத்து சாப்பிட்டார். இன்னொருவரோ தனது குழந்தையை வேகவைத்து சாப்பிட்டார் என்றார்.

பஞ்சக் கொடுமை குறித்து பெயர் தெரிவிக்க விரும்பாத ஒருவர் கூறுகையில், எங்கள் கிராமத்தில் கடந்த மே மாதம் தனது இரண்டு குழந்தைகளைக் கொன்று சாப்பிட முயன்ற ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அந்த நபர் தனது மனைவி வீட்டில் இல்லாத நேரத்தில் முதலில் தனது மகளைக் கொன்றுள்ளார், அதை மகன் பார்த்தால் அவனையும் கொன்றுள்ளார். மனைவி வீடு திரும்பியதும் இன்று சாப்பிட நமக்கு கறி கிடைத்துள்ளது என்று கூறியுள்ளார். இதனால் சந்தேகம் அடைந்த மனைவி இது குறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்க அவர்கள் வந்து வெட்டி எடுத்தது போக மீதமுள்ள உடல்களைக் கண்டுபிடித்தனர்.

சோங்டான் கவுன்ட்டியில் உள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் நபர் பசிக் கொடுமை தாங்க முடியாமல் தனது குழந்தையையே வேக வைத்து சாப்பிட்டுள்ளார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். 1990களில் வட கொரியாவில் கடும் பஞ்சம் ஏற்பட்டு 240,000 முதல் 3.5 மில்லியன் பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொதுத் தேர்தல் விரைவில் பாகிஸ்தான் அரசு அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தேசிய அசெம்பிளியின் பதவிக்காலம் முடிவடைவதை முன்னிட்டு விரைவில் தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் கமர் ஜமான் கைரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது; பாகிஸ்தானின் தேசிய அசெம்பிளியின் ஆயுட்காலம் வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதனையடுத்து அசெம்பிளியை கலைத்துவிட்டு அடுத்த 90 நாட்களுக்குள் பொதுத்தேர்தல் மூலம் புது அரசை தேர்ந்தெடுக்க வேண்டும். இது குறித்து மதத் தலைவரான தாகிர் உல் காத்ரியுடன் தேர்தல் தொடர்பான ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாக கூறினார். மேலும் தற்போதைய கூட்டத்தின் முடிவு திகதி மற்றும் தேர்தல் திகதி ஆகியவை குறித்து இன்னும் 10 நாட்களில் அறிவிப்பு வெளியிடப்படும் எனத் தெரிவித்தார். மேலும் இடைக்கால பிரதமர் மற்றும் மாகாண முதல்வர்கள் நியமனம் குறித்து விவாதித்ததாகவும், பேச்சுவார்த்தையின் போது தேர்தல் ஆணைய தலைவர் குறித்து எதுவும் பேசவில்லலை எனவும் அவர் தெரி வித்தார்

தற்போதைய அரசு மற்றும் மாகாண அரசுகளின் பதவிக்காலம் வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி முடிவடைகிறது. அரசு கலைக்கப்பட்ட திகதியில் இருந்து 90 நாட்களுக்குள் புதிய தேர்தல் நடத்தப்பட்டு புதிய ஜனாதிபதி தேர்வு செய்யப்படவேண்டும்.

இந்நிலையில் வீண் வதந்திகளுக்கு இடமளிக்காத வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

# புற்றுநோய் பாதித்தவருக்கு எலும்பிலிருந்து புதிய மூக்கு

## விஞ்ஞானிகள் சாதனை

புற்றுநோய் பாதித்தவருக்கு எலும் பில் இருந்து புதிய மூக்கு உருவாக்கி விஞ்ஞானிகள் சாதனை படைத்தனர். இங்கிலாந்தைச் சேர்ந்த 53 வயதுக்காரருக்கு மூக்கில் புற்றுநோய் ஏற்பட்டது. அதனால் அவரது மூக்கு பாதிப்படைந்தது. எனவே, அதை அகற்றிவிட்டு புதிய மூக்கு பொருத்த டாக்டர்கள் முடிவு செய்தனர். இந்த நிலையில் எலும்பு மஜ்ஜையில் இருந்து மூக்கை உருவாக்க விஞ்ஞானிகள் முடிவு செய்தனர். எனவே எலும்பு மஜ்ஜையில் இருந்து செல்களை எடுத்து அவற்றை ஆய்வகத்தில் வளர செய்தனர்.

பின்னர் அதை புற்று நோய் பாதித்தவரின் தோள்பட்டையில் மூக்கு வடிவில் தொடர்ந்து வளர வைத்தனர். குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு அதை புற்று நோய் தாக்கியவருக்கு பொருத்தினர். இந்தத் தகவலை, லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் அலெக்ஸ் செபாலியன் ஒரு மருத்துவ இதழில் வெளியிட்டுள்ளார். இது ஒரு பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது

# கல்விச் சமூகங்களுக்கிடையில் முரண்பாடு சுமுகமான முறையில் தீர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கும் வட இந்து ஆரம்பப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரு சாராரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சுமுகமான தீர்வை வழங்கியுள்ளார்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் இரு சங்கங்களும் வட இந்து ஆரம்பப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத்திற்கு எதிராக முறைப்பாட்டை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அவரது கொழும்பு அலுவலகத்தில் சமர்ப்பித்தனர்.

இந்நிலையில் அமைச்சர் யாழ். அலுவலகத்தில் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தம்மை சந்திக்குமாறு தெரிவித்ததற்கிணங்க நேற்று முன்தினம் அமைச்சர் அலுவலகத்தில் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் கொழும்புக் கிளை பழைய மாணவிகள், வட இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆண் மாணவர்களைச் சேர்க்க வேண்டாம் எனவும் பெண் மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

அத்துடன் ஆண் மாணவர்களைச் சேர்த்தால் மாணவிகளின் விகிதாசாரம் குறைந்துவிடும் எனக் கூறினர்.

இதற்கு வட இந்து ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி பாடசாலை சூழலிலுள்ள 3 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் இக்கிராமங்களிலுள்ள சகல பெண்பிள்ளைகளும் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிகமாக 20 ஆண்பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தற்போது 26 பிள்ளைகள் மாத்திரமே கல்வி கற்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

எப்பொழுதும் பெண்பிள்ளைகளுக்கே முன்னுரிமை கொடுப்பதாகவும் அதன்பின்னரே ஆண்பிள்ளைகளைச் சேர்க்க அனுமதிப்பதாகவும் தெரிவித்த அவர் தேவை ஏற்படின் வகுப்பை 3 பிரிவுகளாக ஆரம்பிக்கவும் தயார் எனத் தெரிவித்தார்.

இதற்கு அமைச்சர், வட இந்து ஆரம்பப் பாடசாலை நிர்வாகத்தினர் பெண்பிள்ளைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆண்பிள்ளைகளை எண்ணிக்கைக்கு ஏற்ப சேர்த்துக்கொள்ளலாம் என இருதரப்பினருக்கு சரிசமமாகத் தெரிவித்தார்.

இதனை இரு சாராரும் ஏற்றுக்கொண்டனர். இச்சந்திப்பில் வடமாகாண கல்விப் பணிப்பாளர், பிரதிச் செயலாளர், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (109)

# முதலில் முழுமையான மீள்குடியமர்வு அதன்பின்னரே வடக்கு மாகாண தேர்தல்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

வட மாகாண சபைக்கு நடத்தப்படும் தேர்தல் 1981 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு அமைய மக்கள் மீள்குடியேறிய பின்னரே நடத்தப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இருந்து விரட்டப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களை மீள குடியேற்றாமல் வட [illegible]காண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால், வடக்கில் தமிழ் மக்கள் மாத்திரமே குடியேற வேண்டும் என்ற மாயை உறுதிப்படுத்தப்பட்டு விடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் நல்லது. எனினும் அதனை நடத்த முதல் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியொன்று உள்ளது. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளகுடியேற்றப்பட வேண்டும். பயங்கரவாத குழப்பங்களின் போது, வடக்கில் இருந்து சுமார் ஒரு இலட்சம், சிங்கள, முஸ்லிம் மக்கள் வடக்கில் இருந்து விரட்டப்பட்டனர். அவர்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. அவர்களின் காணி, சொத்துக்கள் இன்னும் இருக்கின்றன எனவும் ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதை எதிர்ப்பதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் அது சட்ட ரீதியானதும், நியாயமானதும் அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாணவன் திடீர் மரணம் மன்னாரில் பரபரப்பு

மன்னார் சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய மாணவன் மயக்கமடைந்த நிலையில் பின்னர் உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஏ.டினோசன் (வயது - 18) என்ற உயர்தர கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

இப்பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டு வருவதாகவும் இவ்வருடம் இப்போட்டி நடத்தப்பட்ட நிலையில் இம்மாணவன் உயிரிழந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க...

பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பில் இலங்கை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம் ஒன்றையும் வழங்கியுள்ளார்.

இதேபோன்று முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பான குற்றவியல் பிரேரணை மற்றும் அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்து, அமெரிக்கப் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவரை வினவியதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகத்துறை தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் அண்மைக்காலமாக நிலவும் மதங்களுக்கு இடையேயான முறுகல் நிலை குறித்தும் அமெரிக்கக் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிணற்றிலிருந்து...

தேடிய நிலையில் வயல் கிணற்றிலிருந்து தொலைதூரத்தில் சைக்கிள் ஒன்று நிற்பதை அடுத்து உறவினர்கள் வயல் கிணறுகளில் தேடிப்பார்த்தபோதே குறித்த வயல் கிணற்றில் மேற்படி குடும்பஸ்தர் இறந்த நிலையில் சடலமாக கிடப்பது தெரியவந்தது.

இதனையடுத்து உறவினர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரும் வல்வெட்டித்துறை மரண விசாரணை அதிகாரி சுசீந்திரசிங்கம் ஆகியோர் விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டதுடன் பிரேத பரிசோதனையை டாக்டர் மயிலேறும்பெருமாள் மேற்கொண்டார்.

இதன் பின்னர் மரண விசாரணையின் போது குறித்த நபர் கடந்த 2 வருடங்களாக வேலை இல்லாமல் மன உளைச்சலுடன் காணப்பட்டதாகவும் அத்துடன் இவருக்கு ஏற்கனவே நோயுள்ளதாகவும் இவர் கிணற்றில் விழுந்து மூச்சுத் திணறியே இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் சடலத்தை புதைக்குமாறு உத்தரவிடப்பட்டதற்கிணங்க தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்தில் சடலம் நேற்று புதைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

## விழிப்புலன்...

உதவியாக ஒருவர் மோட்டார் சைக்கிளில் செல்லவுள்ளார்.

பார்வையற்ற மாணவன் ஒருவர் மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்றுவதையிட்டு பல பொதுமக்களினால் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிக்கப்பட்ட தூரத்தை ஓடி முடிப்பதுடன் இப்போட்டியில் தன்னால் வெற்றிபெற முடியும் என இம்மாணவன் தன்னம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார். (137)

# தேவை அறியாமல் அரங்கேறும் புனரமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட குடமியன் பகுதியில் உள்ள ப.நோ.கூ. சங்கத்திற்கு அருகாமையில் உள்ள 3 குடும்பங்கள் மட்டுமே வீதியானது முன்னுரிமை கொடுக்கப்பட்டு புனரமைக்கப்படுகின்றது. ஆனால் 300 குடும்பங்களுக்கு மேல் பயன்படுத்தும் வீதியினை திருத்தித் தருமாறு கோரிக்கை விடுத்தபோதிலும் அதற்கு முன்னுரிமை கொடுக்காது மக்கள் குடியிருப்பு இல்லாத அடர்ந்த காட்டுக்கு செல்லும் வீதியினை திருத்துவதாக மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியானது வாகனங்கள் செல்லக்கூடிய வகையில் அகலமாக்காமல் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அதிகாரிகள் எவ்வாறு சிபார்சு செய்தார்கள் என மக்கள் கேள்விக்கணை தொடுக்கின்றனர். (130)

## பெண்ணின்...

மகேந்திரன் சாரதாதேவி (வயது - 56) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (29,77,ர)

## மாணவர்...

தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த மாணவர்களை விடுவிப்பதற்கான கால எல்லை இறுதி செய்யப்படவில்லை.

மாணவர்களுடைய செயற்பாடுகளைப் பொறுத்து அடுத்த மாதத்தில் எந்நேரமும் அவர்கள் விடுவிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சரவையில்...

ஹேரத், சீனிக் கைத்தொழில் - லக்ஷ்மன் செனவிரத்ன.

திட்ட அமைச்சர்கள்

நிர்மல் கொத்தலாவல - துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள். ரோஹித அபேகுணவர்த்தன - துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள்

**பிரதி அமைச்சர்கள்:**

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா - பொருளாதார அபிவிருத்தி. எஸ்.எம்.சந்திரசேன - பொருளாதார அபிவிருத்தி. பைஸர் முஸ்தபா - முதலீட்டு ஊக்குவிப்பு, அப்துல் காதர் - சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், சுசந்த புஞ்சிநிலமே - பொருளாதார அபிவிருத்தி, சரத் குமார குணரத்ன - மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் அடிப்படையில் 5 புதிய அமைச்சர்கள் இணைந்துள்ளனர்.

லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன, துமிந்த திசாநாயக்க, ஜயரட்ன ஹேரத், விஜித் விஜயமுனி சொய்சா மற்றும் பஷீர் சேகுதாவுத் உள்ளிட்ட பிரதி அமைச்சர்கள் அமைச்சர்களாக பதவி ஏற்றம் பெற்றதனை அடுத்து அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கு அமைய சிரேஷ்ட அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது.

இது தவிர, அமைச்சரவை மாற்றத்தின் போது, செயல் திட்ட அமைச்சர்களாக இருவர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, பிரதி அமைச்சர்களாக 36 ஆக இருந்த நிலையில், அவர்களில் 7 பேர் அமைச்சர்களாக பதவி உயர்த்தப்பட்டதனை அடுத்து பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 29 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு அமைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் செயல் திட்ட அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 96 ஆக உள்ளது.

## அவதூறு செய்திகளை...

முன்னிலையானார். உதயன் பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் அதன் ஆசிரியர் பிரேமானந்த் தனது வழக்கறிஞர் ஊடாக தோன்றியதுடன் இவ்வழக்கினை சமரசத்திற்கு கொண்டுவர அமைச்சரின் விருப்பம் குறித்து மாவட்ட நீதிபதியினால் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உதயன் பத்திரிகையானது தன்மீதும் தனது கட்சிமீதும் களங்கம் ஏற்படுத்தும் முகமாக தொடர்ச்சியாக விஷமத்தனமான ஆதாரமற்ற பொய்ச் செய்திகளை பிரசுரிக்கின்றது. இதுதொடர்பாக இதனைப்போல பல அவதூறு செய்திகளுக்காக வழக்குத் தொடரவுள்ளேன்.

முதலில் உதயன் பத்திரிகை நிறுவனத்தினர் எனதும் எனது கட்சிமீதும் மேற்கொள்ளப்பட்ட களங்கம் கற்பிக்கும் அவதூறு செய்திகளுக்காக நீதிமன்றின் முன் தோன்றி தமது தரப்பு நியாயத்தை தெரிவிக்க வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். அதன் பின்னர் சமரசம் குறித்து என்னால் சிந்திக்க முடியும் எனவும் கூறினார்.

அமைச்சர் சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி மேற்படி உதயன் பத்திரிகையானது தான் வெளியிடும் செய்திகள் ஊடாக தனது கட்சிக்காரரான கௌரவ அமைச்சரது அரசியல் வாழ்விற்கும் அவரது பெயருக்கும் மிகப்பாரதூரமான முறையில் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் இதற்கு நீதித்துறை ஊடாக உரிய நிவாரணங்களைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதிபதி ஏ.ஆனந்தராஜா இவ்வழக்கினை எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அன்று விசாரணை தொடரும் என அறிவித்தார்.

வழக்கின் முடிவில் நீதிமன்ற முன்றலில் திரண்டிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், தன்மீதும் தன் கட்சிமீதும் உதயன் பத்திரிகை ஊடாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் விஷமத்தனமான அவதூறான செய்திகளுக்கெதிராகவே தான் நீதித்துறையினை நாடியுள்ளதாகத் தெரிவித்தார்.

சட்டவிதிகளுக்கு அமைவாக குறிப்பிட்ட செய்திகள் தொடர்பாக தம்மால் அனுப்பப்பட்ட கோரிக்கைக் கடிதங்களைப் புறக்கணித்ததன் காரணமாகவே தான் ஜனநாயக ரீதியில் நீதிமன்றத்தை நாடியுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு கருத்து வெளியிட்டார்.

## தலையணையை மாற்றினால் தலைவலி தீருமா?

# எதிர்க்கட்சிகள் கிண்டல்

பொதுமக்களுக்கு நிவாரணத்தை வழங்கக் கூடிய திட்டங்களுக்குப் பதிலாக பொதுமக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கும் திட்டங்களையே அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக இக் குற்றச்சாட்டினை வெளிப்படுத்தினார். தமது திறன் அற்ற தன்மையை மறைக்கும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

தலைவலிக்கு தலையணையினை மாற்றுவது போல, நாட்டுப் பிரச்சனையை தீர்ப்பதற்கு தமது தேவைக்காக அமைச்சரவையினை மாற்றுவதன் மூலம் தீர்க்க முடியாது. அமைச்சரவைகளை மாற்றுவதன் காரணமாக அவர்கள் புதிய சந்ததியினை உருவாக்குகின்றனர். அரசாங்கம் அமைச்சர்களின் முகங்களை மாற்றினாலும், சுமை அனைத்தும் மக்களையே சென்றடைகின்றன. தெளிவான முறையில் மின்சார உபயோகம் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதிலும், அரசாங்கத்தில் இடம்பெறும் ஊழல், துஷ்பிரயோகம் என்பன குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை மாற்றங்கள் தொடர்பில் எதிர்கட்சிகளின் விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. முற்போக்கு சோஷலிச கட்சி ஆகியன தமது கருத்துக்களை முன்வைதுள்ளன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக கருத்து தெரிவிக்கையில், அரசாங்கத்தின் இயலாமையை மறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம் இதுவென தெரிவித்தார்.

ஜே.வி.பி.இன் பிரசார செயலாளர் விஜித ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை, நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட மேலும் ஒரு சுமை. முன்னர் ஜம்போவாக இருந்த அமைச்சரவை தற்போது பிளாஸ்டிக் ஜம்போவாக இழுபட்டுள்ளது. வரப்பிரசாதங்களை வழங்குவதன் மூலமாக உடைந்து விழும் நிலையில் உள்ள அரசாங்கத்தை கட்டித் தூக்கி எழுப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவை இது.

அமைச்சரவையை மாற்றத் திற்கும் உள்ளாக்கியமை பொது மக்களின் பிரச்சினையை தட்டிக் கழிக்கும் செயல் என முற்போக்கு சோஷலிச கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சமீர கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

# ஆயுதங்கள் மீட்பு

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கிரான்குளம் பிரதேச காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சிலவற்றை பொலிஸார் கடந்த சனிக்கிழமை மீட்டுள்ளனர். காத்தான்குடி பொலிஸ் புலானாய்வு அதிகாரி எம்.தாஹாவுக்கு கிடைத்த தகவலையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர், கிரான்குளம் பிரதேசக் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை மீட்டெடுத்துள்ளனர். ஒரு மிதிவெடியும், இரண்டு குண்டுகளும் இதன்போது மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# படகு அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இன்று வரை, அவுஸ்திரேலியாவிற்கு சட்ட விரோதமான முறையில் சென்றவர்களில், கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் சுமார் ஆயிரம் பேர் நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரமும் சொந்த விருப்பில் 13 பேர் தாயகம் திரும்பியுள்ளதாக அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

உயர் ஸ்தானிகராலயத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், தமது சொந்த விருப்பிலோ அல்லது அகதி அந்தஸ்து கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பியவர்கள் 942 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது அவுஸ்ரேலியா சென்று அகதி அந்தஸ்து கோரிக்கை முடிவினை எதிர்பார்த்திருக்கும் இலங்கையர்கள் தொடர்பான நடவடிக்கைகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி, அவுஸ்ரேலிய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு அமையவே மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டங்களுக்கு அமைய இவர்கள் குறித்த முடிவுகள் நவ்ரு மற்றும் பப்புவா நியூ கினியாவில் உள்ள முகாம்களில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தெற்கிலும் இராணுவ ஆட்சி கணை தொடுக்கிறார் திஸ்ஸ



(கொழும்பு)

வடக்கில் மாத்திரமல்ல தற்போது தெற்கிலும் இராணுவமயப் படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்ற பாரதூரமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ் சாட்டியுள்ளார். தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க அரச பிரதிநிதிகள், இராணுவத்தின் அறிக்கை தொடர்பான அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகவும், இந்த அனைத்து நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தாது தவிர்க்க அரசாங்கம் முயற்சித்து வருவதை உணர்த்துகின்றது. அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக அரசாங்கம், நாட்டுக்கும், சர்வதேசத்திற்கும் உறுதிமொழியை வழங்கிவிட்டு,

மீண்டும் அதனை செயற்படுத்த முடியாத வகையில் சில சில அறிக்கைகளை பல்வேறு தரப்பினரிடம் இருந்து பெற்றுக் கொள்வது ஜனாதிபதியையும் தரம் தாழ்தியுள்ளது. அத்துடன் நாடும் தரம் தாழ்த்தப்படும். வடக்கில் மாத்திரமல்ல தற்போது தெற்கிலும் இராணுவமயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்ற பார தூரமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதன் இறுதி நோக்கம் இலங்கையில் இராணுவ அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகிறதோ என்ற நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக மீண்டும் இராணுவத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதன் மூலம் அரசாங்கம், சர்வதேச நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீற முயற்சித்து வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரையும் சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர்கடைப் பிரதேசம், நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், நாவலர் வீதியில் கைலாசபிள்ளையார் கோவிலடி சந்தி முதல் ஆனைப்பந்திச் சந்தி வரையான பிரதேசம், இராசாவின்தோட்டம், வைமன் வீதி, பருத்தித்துறை வீதியில் நல்லூர் கோவில் முதல் ஆனைப்பந்திச் சந்தி வரையான பிரதேசம், அரசடி வீதி, அரசடிச் சந்தி முதல் கந்தர்மடம் சந்திவரையான பிரதேசம், சிவன் புது வீதி ஆகிய இடங்களிலும்,

30.01.2013 புதன்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரையும் மாலுசந்தி முதல் மடத்தடி வரையான பிரதேசம் கம் பர்மலைப் பிரதேசம், வடமராட்சி கிழக்கு, நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அராலி வடக்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேசங்கள், அராலி மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி ஒரு பகுதி, தொண்டைமானாறு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும்,

31.01.2013 வியாழக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரையும் சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர்கடைப் பிரதேசம், நயினாதீவுப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களிலும் 01.02.2013 வெள்ளிக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரையும் நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அராலி வடக்கு, அர்ாலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேசங்கள், அராலி மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உரும்பிராய், ஊரெழுப் பிரதேசத்தின் இரு பகுதி, ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

# அமெரிக்க தூதுக்குழு கண்காணிக்கப்பட்டதா?

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ள அமெரிக்க இராஜதந்திரிகள் இங்கு தங்கியிருக்கும் நேரத்தில் மேற்கொள்ளும் சந்திப்புக்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அவர்களைக் கண்காணித்து வந்தனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவி நீக்கம் குறித்து கடுமையான கண்டனங்களை அமெரிக்கா தெரிவித்திருந்த பின்னணியிலேயே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதி உதவிச் செயலர்களான ஜேம்ஸ் மூர், விகரம் சிங், ஜேன் சிம்மர்மன் ஆகியோர் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளனர்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடருக்கு முன்னோடியாக இவர்கள் கொழும்பு விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

கொழும்பு வந்த இந்த அமெரிக்க தூதுக்குழு தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்தி வருகிறது.

இந்தக் குழுவினர் பதவி நீக்கப்பட்ட தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவையும் சந்திக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், மேற்படி கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தந்தி சேவை கைவிடப்படமாட்டாது

அஞ்சல் திணைக்களத்தினால் நடை முறைப்படுத்தப்படும் தந்தி முறைமையை கைவிடுவதற்கான எந்தவிதமான தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார். அந்த முறைமையில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, புதிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அஞ்சல் திணைக்களம் மற்றும் மத்திய தந்தி திணைக்களம் ஆகிய இணைந்து செயல்பட்ட காலப்பகுதியில் இந்த சேவை ஆரம்பமானது. எனினும், ஸ்ரீலங்கா ரெலிகொம் என்ற பேரில், கூட்டுத் தாபனம் ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து தந்தி சேவையினை மேற்கொள்வதற்கான அதிகாரம் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆட்டோ சாரதி வெட்டிக்கொலை சம்மாந்துறையில் கொடூரம்

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை மல்வத்தை பிரதேசத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் வெட்டுக்காயங்களுடன் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மல்வத்தை 2 ஆம் பிரிவு புதுநகரத்தைச் சேர்ந்த சீனித்தம்பி பிரேமநாதன் (வயது-40) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் தனது வீட்டில் இருந்தபோது, நேற்று இரவு 8 மணியளவில் வாடகைக்கு முச்சக்கரவண்டியை மல்லிகைத்தீவு பிரதேசத்திற்கு கொண்டு வருமாறு கூறி கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்துள்ளது.

இதனையடுத்து,குறித்த நபர் தனது முச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு, மல்லிகைத் தீவு பிரதேசத்திற்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு சென்றவர் மல்லிகைத்தீவு மயானத்துக்கு அருகில் வீதியில் இன்று காலை 6.00 மணிக்கு கைகள் மற்றும் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் முச்சக்கரவண்டியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் சடலம் அம்பாறை போதனை வைத்திய சாலையில் பிரேதபரிசோதணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் கைவிரல்களை வெட்டி மோதிரம் களவாளப்பட்டுள்ளதுடன் கையடக்கத் தொலை பேசியும் கொள்ளையடிக்கப்பட்டுச் சென்றுள்ளதாக. சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சம்மாந்துறைப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.